# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




செவ்வாய்க்கிழமை 12.12.2023 supeedsam.com supeedsam@gmail.com


# ஜனாதிபதிக்கு தேர்தல் வருத்தம் இருக்கின்றது



ஜனாதிபதிக்கு தேர்தல் வருத்தம் இருக்கின்றது. ஆனால் தேர்தல் நடக்காது என பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் தலைவருக்காக போட்டியிடவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது. அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள பார்க்கின்றார்.

ஆனால், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அரசியலமைப்பின் பிரகாரம் அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். அதை நடத்தினால் தான் அவர் ஏனைய தேர்தல்களைப் பற்றி

02 ஆம் பக்கத்தில்...

# கொழும்பில் தமிழர்களை இலக்கு வைத்து போலிஸ் பதிவு

கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களை இலக்குவைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (11) உரையாற்றுகையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இதன்படி, கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, மோதரை ஆகிய பொலிஸ் பிரிவுகளில்

02 ஆம் பக்கத்தில்...



# தமிழர்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் போலிஸ் பதிவு முன்னெடுப்பு



கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களை இலக்கு வைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதற்கு பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேதமதாச தமது கண்டனத்தை தெரிவித்தார்.

கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளான கிருலப்பனை, வெள்ளவத்தை,

02 ஆம் பக்கத்தில்...

# ரணில் கூட்டணியில் சஜித்!



எதிர்கட்சி தலைவல் சஜித் பிரேமதாச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டணியில் இணையவுள்ளதாக பல்வேறு அமைப்புகள் பொய்யான செய்திகளை பரப்பி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனங்கள் ஊடகங்கள் எனக் கூறி போலியான செய்திகளை பரப்பி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

02 ஆம் பக்கத்தில்...

# தபால் ஊழியர்களும் பணி பகிஷ்கரிப்பு

(ஹஸ்பர்)

கிண்ணியா, தம்பலகாமம் தபால் நிலையம் நேற்று (11) காலை முதல் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக மூடப்பட்டிருந்தன. இதனால் தபால் நிலையத்துக்கு வந்த பலர் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது திரும்பிச் சென்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

# கொழும்பில் பதிவு நடவடிக்கைகளை நிறுத்த முடியாது

## அமைச்சர் டிரான் அலஸ்!

கொழும்பு வாழ் தமிழ் மக்களை இலக்கு வைத்து பொலிஸாரினால் தனிபட்ட தகவல்கள் சேகரிக்கப்படுவதாகவும் குறித்த விண்ணப்பபடிவங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் வழங்கப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் அனைத்து தரப்பினரிடமும்

02 ஆம் பக்கத்தில்...



# உலகத் தமிழர் பேரவை பௌத்த பீட்டாதிபதிகள், இலங்கை அரசுடனான சந்திப்பை தவிர்க்க வேண்டும்




உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் இலங்கை அரசுடன் மற்றும் பௌத்த பீடாதிபதிகளுடக் கலந்துரையாடல்களில் ஈடுப்படுவதை தவிர்க்கவேண்டும் என பைடனுக்காக தமிழர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராமநிக்காய பீடத்தினரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுப்பட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...









# யாழ். பல்கலைக்கழக மாணவரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவனும் கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் உப தலைவருமான இராசரத்தினம் தர்சனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...






## தம்பலகாமத்தில் மனித உரிமைகள்தின வாரம் அனுஷ்டிப்பு

(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் மனிதாபிமான வளநிலையத்தின் (அஏகீஇ) ஏற்பாட்டில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீரா நகர் கிராம சேவகர் பிரிவின் அரபாநகர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் சிவில் அமைப்புக்களினால் (11) திங்கட்கிழமை மாலை மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது குறித்த பகுதியில் சேதமடைந்த வீதிகள் ஊடாக பயணிக்க முடியாதுள்ளதாகவும், கட்டி முடிக்கப்பட்ட நூலகம் திறக்கப்படாமல் உள்ளதாகவும், மருந்து பற்றாக்குறை நிலவுவதாகவும் இவற்றின் மூலம் தமது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டதோடு முஸ்லிம் பெண்கள் பணியாற்றக்கூடிய சிறு தொழிற்சாலைகளை அமைத்துத்தருமாறும் குறிப்பிட்டு அதன் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்காக அஏகீஇ நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், கிராம மக்கள் உட்பட அஏகீஇ நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## கற்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு உணவு விநியோகம்

(க.ருத்திரன்)

கற்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு உணவு விநியோகத் திட்டம் கிரான் கோறளை தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் இன்று (11) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபுவின் ஆலோசனையின் பேரில் 2023 ஆம் ஆண்டிற்கான புதிய பல நோக்கு கூட்டுறவு சங்க நிர்வாகம் இவ் திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.

பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் அ.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இன்றைய நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் எம்.விஜேந்திரராஜா,அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் பார்த்தீபன் மற்றும் பொது முகாமையாளர் சி.சிவசுதன் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 16 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் கற்பிணிப் பெண்கள் இவ் அரச உதவியினை பெறும் நன்மை கிடைத்துள்ளது.மாதாந்தம் 4500 ரூபா பெறுமதியான 9 வகையான ஒரு வருடத்திற்குரிய போசாக்கான உணவுப் பொருட்க்கள் வழங்கப்படவுள்ளதாக பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் தெரிவித்தார்.இன்று உணவுப் பொருட்களை பெற்றுச் செல்வதில் பயணாளிகள் ஆர்வம் செலுத்தினர்.



# தமிழரசுகட்சி தலைவராக யாரை ஆதரிப்பது எந்த முடிவும் எடுக்கவில்லை!

## வேதநாயகம் அரவிந்தன்



இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி'தலைவர் பதவிக்கு எம்.ஏ.சுமந்திரனை' ஆதரிப்பதாக தீர்மானம் எடுக்கப்பட்டதாக சில சமூக ஊடங்களில் வெளிவந்த செய்தி உண்மைக்கு புறம்பானது என தமிழரசுகட்சியின் கல்முனைத்தொகுதி செயலாளர் வேதநாயகம் அரவிந்தன் இன்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்

தமிழரசு கட்சியின் தலைமை தெரிவு தொடர்பில் இதுவரை எந்தத்தீர்மானங்களும் எமது தொகுதிக்கிளை எடுக்கவில்லை அப்படி எடுக்கும் உரிமையும் எமக்கு கிடையாதெனவும் கட்சியின் தொகுதிக்கிளை கூடியதாகவும் அப்போது சில வட்டாரப் பிரச்சினைகள், உறுப்பினர்கள் கட்சி மாறிச் செயற்படுகின்றமை, கட்சி உறுப்பினர்களின் அங்கத்துவத்தை அதிகரித்தல் மற்றும் பொது விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் அவையே எமது நிகழ்ச்சி நிரலாக இருந்ததெனவும் குறிப்பிட்டார்.

தமிழ் அரசு கட்சி தலைமை தெரிவு தொடர்பில் உங்களது தொகுதியின் நிலைப்பாடு என்னவென சிலர் கேட்டபோது தலைவரை வாக்கெடுப்பு முறையில் தெரிவுசெய்ய நேரிட்டால் எமது தொகுதி உரிய நேரத்தில் சரியான முடிவை எடுக்கும் எனவும் தெரிவு செய்யப்படும் தலைமையுடன் தாம் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தும், ஏனைய தொகுதி, மாவட்ட கிளைகளை தர்மசங்கடத்துக்குள்ளாக்கும், கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்கவேண்டுமெனவும் கட்சி உறுப்பினர்கள் முரண்பாடான தன்னிச்சையான கருத்துக்களை இவ்வாறு ஊடகங்களில் கூறுவதை தவிர்கதே கட்சியின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியம் எனவும் மேலும் கூறினார்.

## யாழ். பல்கலைக்கழக மாணவரிடம் பயங்கரவாத...

கடந்த 2022ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்தபோது விடுதலைப்புலிகளின் பாடல் இசைக்கபட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகள், வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நேற்று சுமார் 3 மணத்தியாலத்திற்கும் மேலாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. இ.தர்சன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பத்திரிகை ஒன்றில் ஊடகவியாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் பதிவு நடவடிக்கைகளை...

இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தமிழ் மக்களின் வீடுகளில் மாத்திரம் இவ்வாறு நடப்பதாக பொய் கூறுகின்றார்.

கடந்த முறை இவ்வாறன குற்றச்சாட்டை முன்வைத்த போது தனிப்பட்ட ரீதியில் நான் அவருக்கு அனைத்து விடயங்களையும் தெளிவுப்படுத்தினேன்.

கொழும்பில் 90 வீத மக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அதில் சிங்களவர்கள் முஸ்லிம்கள் தமிழர்கள் என அனைவரும் இருக்கின்றார்கள்.

இன்றைக்கு நேற்றோ அல்லது நான் வந்த பிறகோ இந்த பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

வருடக்கணக்கான இவ்வாறு பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வேறு மாவட்டத்தில் வசிக்கும் ஒருவர் தவறு செய்துவிட்டு கொழும்பிற்கு வந்து வீடொன்றில் மறைந்திருந்திருக்கலாம் அல்லது கொழும்பில் இருந்து வேறு மாவட்டத்திற்கு சென்றிருக்கலாம்.

இவ்வாறு நபர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதை அறிந்துக்கொள்வதற்காகவே நாங்கள் இந்த பதிவு நடவடிக்கையை முன்னெடுக்கின்றோம். அதில் எவ்வித தவறும் இல்லை. நாங்கள் மதம் குறித்து கேட்பதில்லை. இனம் குறித்து மட்டுமே கேட்கிறோம்.

இவருக்கு தேவையென்றால் அனைத்து ஆவணங்களையும் கொண்டு வந்து கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்போம்.

இந்த பதிவு நடவடிக்கைகளை எம்மால் நிறுத்த முடியாது.

சிங்கள மொழியில் மாத்திரமே விண்ணப்பங்கள் இருப்பதாக கூறினால் அது குறித்து தேடிப் பார்த்து திருத்தங்களை மேற்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணில் கூட்டணியில் சஜித்!

ரணில் சஜித் எந்தக் கூட்டணியிலும் இல்லை என்றும், இது தொடர்பாக பரப்பப்படும் செய்தி முற்றிலும் தவறானது என்றும் சஜித் பிரேமதாச அங்கு தெரிவித்தார்.

அரசாங்கத்திடம் பணம் பெற்றுக்கொண்டு இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் இன்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை இயற்றும் அதிகாரம் சட்டப் பேரவைக்கு உண்டு என்றும் ஜனாதிபதிக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ அதற்கான அதிகாரம் இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த பாராளுமன்ற உறுப்பினராக சித்தார்த்தனை நியமிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்த போதிலும் இதுவரை அவர் நியமிக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## தபால் ஊழியர்களும் பணி பகிஷ்கரிப்பு

மின்சார கட்டணம், தண்ணீர் கட்டணம் முதலானவற்றுக்கு பணம், செலுத்துவதற்காகவும் ஏனைய தேவைகளுக்காக வந்தவர்கள் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது திரும்பிச் சென்றனர்.

நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய அஞ்சல் அலுவலகங்களை அரசாங்கம் விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்னும் பல கோரிக்களை முன்வைத்தும் அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் இவ்வாறு நள்ளிரவு 12.00 மணி முதல் 48 மணித்தியாலய பணிபகிஷ்கரிப்பில் நாடு முழுவதிலும் ஈடுபடவுள்ளனர்.அந்த வகையில் அஞ்சல் அலுவலக ஊழியர்களும் இந்த பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தம்பலகாமம் ,கல்மெடியாவ,சிராஜ் நகர்,முள்ளிப்பொத்தானை,கிண்ணியா பிரதான தபாலகம் உள்ளிட்ட பல உப தபாலகங்கள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## தமிழர்களுக்கு அநீதி இழைக்கும் ...

தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, மோதரை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தமிழர்களை இலக்குவைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அரசியலமைப்பை மீறி இந்த விண்ணப்பங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மாத்திரமே வழங்கப்படுகின்றன. இதனை உடனடியாக நிறுத்துங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் இன்று வெளிப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, இந்நடவடிக்கை தவறானது. ஆட்களை பதிவு செய்வதற்கென நடைமுறையொன்று உள்ளது. இந்த நடைமுறையினையே பயன்படுத்த வேண்டும். ஆனால் தமிழர்கள் மத்தியில் பொலிஸ் முறைமை பயன்படுத்தப்படுகிறது. இது அநீதி இழைக்கும் செயற்பாடு. நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம். ஒருதரப்பினருக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் வெளிப்படைத் தன்மையும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும் என தெரிவித்தார்.

## உலகத் தமிழர் பேரவை பௌத்த பீட்டாதிபதிகள், இலங்கை அரசுடனான...

இதனையடுத்தே பைடனுக்காக தமிழர்கள் அமைப்பு இந்த சந்திப்புக்கள் கடந்த கால தமிழ்த் தலைவர்களை அவமதிப்பதாகக் கருதப்படும் என தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவையின் இந்த சந்திப்புக்கள் தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்கிடையில் நல்ல வரவேற்பை பெறவில்லை.

கடந்த 75 வருடங்களாக, இலங்கையில் ஆட்சி அமைப்பது, தேர்தலில் வெற்றி பெறுவது, செல்வந்த நாடுகளிடம் இருந்து நிதியைப் பெறுவது, ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக சிங்கள அரசுகள் தமிழர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை நாம் தொடர்ச்சியாக அவதானித்து வருகிறோம்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து, தமிழர்களின் நிலம், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட உரிமைகள் என்பவற்றை படிப்படியாக அபகரித்து சிங்கள இனவாதிகள் அனுபவித்து வருகின்றனர்.

இதற்கு நேர்மாறாக, சிங்கள பௌத்தர்கள் தங்கள் பொறுப்புகளை கோடிட்டுக் காட்ட ''மகா வம்சத்தை'' நம்புகின்றனர்.

அவர்களின் நம்பிக்கையின்படி, பௌத்தர்கள் அல்லாதவர்களைக் கொல்வது நியாயமானது என்று நம்புகிறாரகள். மற்றும் முழு தீவையும் சிங்கள பௌத்த பிரதேசமாக நிறுவ முயலுகிறார்கள்.

கடந்த காலங்களில் பௌத்த பிக்குகளே, அரசியல் தீர்மானங்களுக்கு இடையூறு விளைவித்ததுடன், தமிழர்கள் தீவைப் பகிர்ந்து கொள்வதற்கு சமஷ்டித் தீர்வுக்காக வாதிட்ட சிங்களத் தலைவர்களை படுகொலையும் செய்தனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அல்லது இந்தியா போன்ற அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்குமிக்க நாடுகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட்ட மற்றும் அர்த்தமிக்க அரசியல் தீர்வை அடைவதற்கான ஒரே வழி.

1976 மே மாதம் வட்டுக்கோட்டையில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், எம்.திருச்செல்வம் ஆகியோரால் சமஷ்டித் தீர்வை நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாறாக, அவர்கள் சுயநிர்ணயக் கொள்கையின் அடிப்படையில் ''சுதந்திர, இறையாண்மை, மதச்சார்பற்ற, தமிழ் ஈழ அரசு'' உருவாக்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர். 1,46,000 தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும், 30,000 தனிநபர்கள் காணாமல் போனதற்கும், 90,000 விதவைகளை உருவாக்குவதற்கும், 50,000 அனாதைகளை விட்டுச் சென்றதற்கும் இந்தப் போர்க்குற்றவாளிகளே பொறுப்பு என்று குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பில் தமிழர்களை இலக்கு வைத்து பொலிஸ் பதிவு

இவ்வாறு பொலிஸ் பதிவு மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், விண்ணப்பங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மாத்திரம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன்படி, சபையில் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ;

நாட்டில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகியன அரசகரும மொழிகளாக காணப்படுகின்றன. இருப்பினும், சிங்கள மொழியில் மாத்திரம் விண்ணப்பங்கள் தரப்படுகிறது.

ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? யாருடைய பொலிஸ் அதிகாரம்.

இந்த நாட்டில் யுத்தம் இல்லை. யுத்தம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. யுத்தத்தை நிறைவு செய்துவிட்டதாக மஹிந்த ராஜபக்ஷ சபையில் அறிவித்தார்.

ஆகவே நாட்டில் யுத்தம் என்றவொன்று இல்லை. தீவிரவாதம் இல்லை. எதனால் பொலிஸ் பதிவு முன்னெடுக்கப்படுகிறது?

தேர்தல் காலத்தில் வீடுவீடாகச் சென்று துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதை போன்று பொலிஸார் விண்ணப்பங்களை பகிர்ந்தளிக்கின்றனர்.

ஆகவே, பொலிஸார் பொலிஸாரின் தொழிலை பாருங்கள். கிராம உத்தியோகத்தர்களின் வேலைகளை செய்யாதீர்கள். மக்களை அச்சமூட்டாதீர்கள்.

தனிப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு . ஒருவரின் தனிப்பட்ட தகவல்களை வைத்து எதை வேண்டுமானாலும் செய்யமுடியும் என்பது யாவரும் அறிந்தது.

தமிழர்களிடையே மாத்திரம் தரவு பதிவு செய்யப்படுகிறது. இதனை உடனடியாக நிறுத்துங்கள்.

அமைச்சரிடம் இது குறித்து வினவியபோது பதில் வழங்கவில்லை. ஆகவேதான் சபையில் கேள்வி எழுப்பவேண்டிய நிலை ஏற்பட்டது'' எனத் தெரிவித்தார்.

இந்தநிலையில், பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உண்மைக்குப் புறம்பான விடயங்களை சபையில் முன்வைப்பதாக அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

மனோகணேசன் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிகையிலே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் தொடர்ந்து கருத்துரைக்கையில்;

''பொலிஸ் பதிவு குறித்து கடந்த முறையும் தெளிவுபடுத்தினேன். கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான பதிவுகள் நிறைவடைந்துள்ளன. அதில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து தரப்பிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சுப் பொறுப்பை நான் கையேற்றது முதல் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு ஏதேனும் தவறை செய்துவிட்டு கொழும்பில் தலைமறைவாகி இருப்பாரானால் குறித்த நபரை அடையாளம் காணும்வகையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனிநபர் தொடர்பில் தகவல் சேகரித்து வைக்கப்படுகிறது. இதில் தவறொன்றும் இல்லை.

தமிழர்களின் வீடுகளில் மாத்திரவு பதிவு மேற்கொள்ளப்படுவதாக தொடர்ந்தும் மனோ கணேசன் சபையில் கூறிவருகின்றார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

பாதுகாப்பு கருதி பதிவு மேற்கொள்ளப்படுகிறது. இதனை ஒருபோதும் நிறுத்தமுடியாது'' எனத் தெரிவித்தார்.

## ஜனாதிபதிக்கு தேர்தல் வருத்தம் இருக்கின்றது...

சிந்திக்க முடியும். ஆனால் அவர் தேர்தலை நடத்த பயப்படும் நிலைமை காணப்படுகிறது.

தேர்தலை என்றாலே விசர் நாய் தண்ணீரை கண்டது போல் பயப்படுகின்றார். ஆகவே அவர் தேர்தலை நடத்தவே மாட்டார். எதிர் வரும் ஆண்டு ஒக்டோபர் மாதம் தேர்தல் ஒன்றினை நடத்தியாக வேண்டும்.

அதன்பின் யார் ஜனாதிபதியாக வருகின்றார்களோ அவர் தேர்தலை பற்றி யோசிப்பார். ஆகவே இலங்கையில் தற்போதைக்கு வேறு தேர்தல்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை.

ஏதேனும் அதிசயங்கள் அல்லது அழுத்தங்கள் இடம்பெற்றால் மாத்திரமே தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் தமிழரசு கட்சியின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதாக கூட்டமைப்புக்குள் இருந்து ஏனைய கட்சிகள் வெளியேறி இருந்தன. ஆகவே, தாங்கள் தமிழரசுக் கட்சியினுடைய தலைவராக பொறுப்பு ஏற்றுக்கொண்டால் ஏனைய கட்சிகளை ஒன்றிணைப்பீர்களா?

இணைந்த வடக்கு கிழக்கு பிராந்தியரீதியாக செயல்படும் மிகப்பெரும் பேரியக்கம் எமது தமிழரசுக் கட்சியாக காணப்படுகிறது. தமிழரசு கட்சியினுடைய காலச் சூழலில் அது புதிய தலைவர்களை அறிமுகம் செய்திருக்கிறது. தலைவர்களை இயற்கையும் காலமும் கொண்டு வருகின்றது.

ஆகவே, இது ஒரு விவேகமான ஒரு உள்ளக தேர்தலாக காணப்படுகிறது. எனது ஆளுமைக்கும் எனக்குள்ள ஆற்றலுக்கும் ஏற்றார் போல் ஏனைய எல்லோரையும் கூட்டாக அரவணைத்து தமிழரசுக் கட்சியை கட்டி வளர்ப்பதோடு ஏனைய கட்சிகளோடும் நல்லுறவைப் பேணி தமிழ் தேசிய விடுதலைக்காக பயணத்தை முன்னெடுப்போம்.

ஏனைய கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதானது தற்போதைய காலத்தின் கட்டாயமாக உணரப்படுகிறது. நாங்கள் அதனை நிராகரிக்கவில்லை. அது தமிழ் மக்களுக்கான தேவையாக இருக்கிறது. அந்த ஒற்றுமைக்காக என்னென்ன விட்டுக்கொடுப்புகளை செய்ய முடியுமோ, என்ன விடயங்களில் சேர்ந்து போவது என்பது தொடர்பிலும் கதைத்து அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கிறேன் என தெரிவித்தார்.

# அகில இலங்கை கர்நாடக சங்கீத பரத நாட்டியப் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் சாதனை






**(ரக்ஸனா)**

அனுராதபுரம் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கர்நாடக சங்கீத பரதநாட்டியப் தேசியமட்டப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இருந்து கலந்து கொண்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

அந்த வகையில் களுதாவளை மகாவித்தியலயம் தேசியபாடசாலை சிரேஸ்ட பிரிவு ஒன்றில் தப்பாட்டம் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய மாணவர்கள் பரதநாட்டியப் சிரேஸ்ட பிரிவு ஒன்றில் சுதந்திரம் எனும் தலைப்பில் நடைபெற்ற புத்தாக்க நடனப் போட்டியில் இரண்டாம் இடம்இடத்தைப் பெற்றுள்ளனர்.

பெரியபோரதீவு பாரதி மகாவித்தியாலயம் வேடுவர் நடனம் இரண்டாம் இடத்தையும், தைந்நீராடல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

செட்டிபாளையம் மகாவித்தியாலம் இசைகுழு நாட்டார் பாடலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இசை பிரிவு ஐந்தில் கலந்து கொண்ட களுதாவளை மகாவித்தியலயம் தேசிய பாடசாலையைச்; சேர்ந்த ஜெ.டிலோஜி எனும் மாணவி மூன்றாம் இடத்தையும், பெற்றுள்ளதோடு, வயலின் போட்டியில் கலந்து கொண்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்களான நி.மோரக்ஸகா, முதலிடத்தையும், சி.அத்விகா இரண்டாமிடத்தையும், பெற்றுள்ளனர்.

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள இப்பாடசாலைகளுக்கும் கிராமங்களுக்கும், கல்வி வலையத்திற்கும் இவ்வாறு தேசியமட்டப் பரத நாட்டிய கர்நாடகப் சங்கீதப் போட்டிகளில் பங்கேற்று சாதனைகளை நிலைநாட்டிக் கொடுத்துள்ள மாணவர்ளுக்கும், மாணவர்களை ஊக்குவித்த அதிபர்கள், மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர், மற்றும் கல்விச் சமூகத்தின் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# திருமலையில் கலைச்சங்கமம் இன்னிசை நிகழ்வு.!





**(அ.அச்சுதன்)**

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கலைச்சங்கமம் இன்னிசை நிகழ்வு 09.12.2023 (சனிக்கிழமை) நேற்று மாலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசகர் வட்டத்தின் தலைவர் சரவணபஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகர், சிறப்பு விருந்தினராக சனசமூக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, வீணை நிகழ்வு, திருகோணமலை மாவட்டத்தின் சிரேஷ்ட, இளைய பாடகர்கள் கலந்துகொண்டு சிறப்பாக பாடல் பாடியிருந்தனர்.

இந்நிகழ்வினை, கவிஞர் க.யோகானந்தம் தொகுத்து வழங்கியிருந்ததுடன், வரவேற்புரையை நூலக சேவகா ரூ.பிரியதர்சினி மற்றும் நன்றியுரையை வாசகர் வட்டத்தின் ஆலோசகர் அ. அச்சுதன் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த பாடகர்கள் தியாகராஜா, மு.சிவகங்காதரன், க.நேமிநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுபாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரம் தோடர்பான சர்வதேச தின நிகழ்வுகள்







**(க.ருத்திரன்)**

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரம் தொடர்பான சர்வதேச தின நிகழ்வுகள் கிரான் கருணா ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வுகள் யாவும் மட்;டக்களப்பு மாவட்ட அருவிப் பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சிரேஸ்ட சட்டத்தரணி திருமதி மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்றது.

அருவிப் பெண்கள் வலையமைப்பினால் உருவாக்கப்பட்ட பிரதேச மட்டக் குழுக்கள்இ சிறு குழுக்கள்இ இளைஞர் குழுக்கள் மற்றும் மாவட்ட குழுக்கள் என்பன இணைந்து அவர்களின் பங்குபற்றுதலுடன் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

மாவட்டத்தின் 09 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உருவாக்கப்பட்ட பிரதேச மட்டக் குழுக்களிடையே ஒற்றுமையை பிரதிபலிக்கும் முகமாக தீப்பந்தம் ஏற்றப்பட்டு ஒவ்வொரு குழு அங்கத்தவர்களிடையே கைமாறப்பட்டு அதிதிகளின் பங்கு பற்றுதலுடன் பொதுதீபம் ஏற்றப்;பட்டது.

சுயதொழில் விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு மரபு ரீதியாக பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை நடவடிக்கைகள் நடைபெற்றன. பெற்றோர்களை இழந்த நிலையில் கல்வி கற்று பல்கலைக் கழகம் செல்லும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்இசாதணைப் பெண்கள்இகௌரவ அதிதிகள் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயல் திட்ட நிகழ்வுகள் நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை 16 நாட்களாக மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்இ செங்கலடி பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம்இகிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவுஇ பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடிஇகிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் வி.வசந்தா ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# கண்டபடி மரங்களை வெட்டி அழிக்க முடியாது



**(ரக்ஸனா)**

மரங்களின் பயன்பாடுகள் மக்களுக்குப் பல வழிகளில் இன்றியமையாதது, அவ்வாறு இருந்தபோதிலும் கண்டபடி மரங்களை வெட்டி அழித்து கட்டாந்தரையாக்க முடியாது என சைல்ட் பண்ட - சிறுவர் நிதிய சர்வதேச அலுவலகத்தின் அவசர நிலை முகாமைத்துவ பணிப்பாளர் பி. பென்ஞ்ஜமின் தெரிவித்தார்.

சைல்ட் பண்ட - சிறுவர் நிதிய சர்வதேச அலுவலகத்தின் அதிகாரிகள் குழுவொன்றுடன் மட்டக்களப்பு - வவுணதீவுப் பிரதேசத்திற்கு வியாழனன்று (07.12.2023) வருகை தந்து அங்கு அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ உதவு ஊக்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்களைப் பார்வையிடும் நிகழ்வின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுணதீவு சாளம்பைக்கேணியில் ஆடை உற்பத்திகான இளையோர் ஆற்றல் அபிவிருத்தி தொழில் வள நிலையத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர் அங்கு பிரதேச இயற்கை நேச இளைஞர் செயல்பாட்டு அணியினரால் நிகழ்த்தப்பட்ட இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் எனும் விழிப்புணர்வுக் கலை நிகழ்வையும் குழுவினர் பார்வையிட்டதுடன் மரங்களையும் நாட்டி வைத்தனர்.

நிகழ்வில் இயற்கை நேய ஆர்வலர்களான இளைஞர் அணியினர் மத்தியில் கருத்துத் தெரிவித்த பென்ஞ்ஜமின்,

பாராட்டத்தக்க வகையில், மௌன நாடகத்தின் மூலம் இயற்டிகையைப் பாதுகாப்பதன் அவசியத்தை மிகத்துல்லியமாக திறம்பட விழிப்புணர்வூட்டியிருந்தீர்கள். இயற்கையை நேசிப்பவர்களாக பிரதேசத்திலுள்ள இளைஞர்களே அணியாக முன்வந்து இதனைச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

மரங்கள் மனிதர்களுக்குப் பல்வேறு வழிகளில் உதவுகின்றன. மரங்களை மனிதர்கள் தங்களது தேவைக்குப் பயன்படுத்துவதை சரியான முறையில் முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

புதிய மரங்களையும் வனங்களையும் உருவாக்கி விட்டு தமது தேவைக்கு மரங்களைப் பயன்படுத்தினால் பாதிப்புக்கள் ஏற்படாது. என்றார்.

இந்நிகழ்வில் சைல்ட் பண்ட - சிறுவர் நிதிய சர்வதேச அலுவலகத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் திலக் திலகரத்ன, இடர் குறைப்பு நிபுணர் லாலனி விஜேசூரிய, அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கே. கஜந்திரன், நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் வி. சுதர்ஷன் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் உட்பட அந்நிறுவனங்களின் இன்னும் பல அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்குபல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தென்கிழக்குபல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்ப துறைக்கு அதி நவீன 3ஈ மாடலிங் மற்றும் ரோபோடிக்கிஸ் ஆய்வகத்தை நிறுவுவதற்கு தேவையான அதி நவீன 3ஈ பிரிண்டர், ரோபோட்டிக் கை உட்பட பல ரோபோட்டிக்ஸ் உபகரணங்களை துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனம் வைபவ ரீதியாக அண்மையில் கையளித்தது.

இந் நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல்.மஜீட், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைத் தலைவர் ஆர்.கே.றிபாய் காரியப்பர், சிரேஸ்ட விரிவுரையாளர்கள், முன்னாள் துறைத் தலைவர் கே.எம்.றிப்தி உட்பட பீடாதிபதிகள், திணைக்கள தலைவர்கள், கல்விசார்,கல்வி சாரா உத்தியோஸ்தர்கள்,பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்கள்,,TIKA நிறுவன பிரதிநிதிகளான செவ்கி மெட்ஸ் பாரிஸ், ஜெய்னப் பைரார் மற்றும் ஓயா துதுன்சு அகியோர் கலந்து கொண்டனர். .



# மட்டக்களப்புக்கு பொங்கல் விழாவில் கலந்துகோள்ள வரும் ஜனாதிபதி புதிய திட்டங்களை முன்வைக்கும் முன்வைக்க வேண்டும்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு களுதாவளைப் சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு பொங்கல் விழாவில் கலந்து கொள்ள வரும் ஜனாதிபதி புதிய திட்டங்களை முன்வைக்கும் பட்சத்தில் அது தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். வெறுமனே பொங்கலை வைத்துவிட்டுப் போவதனால் எதுவித பிரயோசனமும் அடையப்போவதுமில்லை. என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான சோமசுந்தரம் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இவ்விடையம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் அரசியல் பொதிகளாக கடந்த காலங்களில் நான்கு தடவைகள் பிரேரிக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் ஒஸ்லோ பிரகடனம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் காலத்தில் 2000 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பிராந்திய அபிவிருத்திச் சபைகள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் காலத்தில் கொண்டுவரப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவின் முன்மொழிவுகள், இவற்றிற்கு மேலத்திகமாக ஆரம்பத்தில் மங்கள முனசிங்கவின் காலத்தில் முன்மொழியப்பட்ட சமஸ்ட்டியோடு இணைந்த தீர்வுப் பொதியும் இதுவரை காலமும் இலங்கையின் அரசியல் பிரச்சனைக்குத் தீர்வுகளாக முன்மொழியப்பட்டுள்ளன.

இந்நிலையில் அரசியலமைப்பு தொடர்பில் 2015 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நியமித்த அரசியல் நிருணயக்குழு தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்ப



தற்குரிய 13 வது திருத்தச் சட்டத்திற்கு அப்பாற் சென்று பூரண அதிகாரப் பரவலாக்கலை முன்வைத்திருந்தது. அது தொடர்பிரான குழுக்களும் நியமிக்கப்பட்டு தீர்வுகளும் ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளன.

இவைகளனைத்தும் இவ்வாறு அமைகின்ற போதிலும் மீண்டும் தற்போதைய ஜனாதிபதி புதிய அரசியலமைப்புக் குழுவொன்றை அமைக்கவிருப்பதானது ஓர் கண்துடைப்பு வேலையாகும். இது காலத்தை இழுத்தடிக்கும் வேலையாகும். 13வது சரத்திலுள்ள விடையங்கள் பொலிஸ், காணி அதிகாரங்கள், மற்றும் மாகாண முதலமைச்சர்களுக்கு பல்கலைக்கழகங்களை நிறுவுகின்ற அதிகாரம், உள்ளிட்டவற்றை வழங்கினால் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளளார்.

இவ்வாறான அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டும் என்பதை 13 திருத்தச் சட்டத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதீட்டுக்குப் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்ற. இது இவ்வாறு இருக்க பொங்கல் விழாவிற்காக மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு ஜனாதிபதி அவர்கள் வரவுள்ளதாக தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மேகன் தெரிவித்துள்ளார்.

எனவே மட்டக்களப்பு களுதாவளைப் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு வரும் ஜனாதிபதி அங்குவைத்து புதிய திட்டங்களை முன்வைக்கும் பட்டசத்தில் அது தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். வெறுமனே பொங்கலை வைத்துவிட்டுப் போவதனால் எதுவித பிரயோசமமம் அடையப்போவதுமில்லை. என அவர் மேலும் தெரிவித்தார்.

# அடிமட்ட மக்களை சமூக பொருளாதார கல்வி கட்டமைப்பு ரீதியில் வலுப்படுத்தும் சேவைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக் கிடைக்கும்

## திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எஸ். அருள்ராஜ்





(ரக்ஸனா)

அடிமட்ட சமுதாய மக்களை சமூக, பொருளாதார, கல்வி, கட்டமைப்பு ரீதியில் வலுப்படுத்தும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அர்ப்பணிப்புடனான சேவைக்கு தொடர்ந்தும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அருள்ராஜ் தெரிவித்தார்.

திருகோணமலை கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்தக் கூட்டுறவு விழா திங்கட்கிழமை (11.12.2023) கலாசார மண்டபத்தில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் மூதூர், சேருநுவர, வெருகல், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வ அமைப்பினால் நிதியுதவி அளிக்கப்பட்டு இயங்கி வரும் தமிழ் சிங்கள முஸ்லிம் சமூகங்களின் கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

அத்துடன் அவர்களது உற்பத்திப் பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததோடு சிறந்த கூட்டுறவுச் செயற்பாட்டாளர்களுக்கும் கூட்டுறவு அமைப்புக்களுக்கும் விருதுகளும் நினைவுச்சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அங்கு தொடர்ந்து பேசிய மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அருள்ராஜ், அடி மட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றத்தில் கரிசனை கொண்டுள்ள வீ பெக்ற் நிறுவனமும் திட்டத்தை அமுலாக்கம் செய்யும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனமும் பாராட்டுக்கும் நன்றிக்குமுரியவை. அதனால் அந்நிறுவனங்களது அர்ப்பணிப்புடனான மக்கள் சேவைக்கு எமது மாவட்ட, பிரதேச செயலகங்கள் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்கும். என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரன், சிறந்த வெளிப்படைத் தன்மையுடனான அர்ப்பணிப்புள்ள சேவை செய்து வரும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்துடன் கடந்த 10 வருடங்களாகப் பணியாற்றி வருகின்றோம். அவர்களின் சிறந்த வெளிப்படைத் தன்மையான திட்ட அமுலாக்கம் மற்றும் நிருவாகத்தின் கணப்பீட்டில் தொடர்ந்தும் அந்த நிறுவனத்துடன் பணியாற்ற முடிவெடுத்துள்ளோம். இது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் சங்கங்களின் பதிவாளருமான என். மதிவண்ணன், மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவை ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ், கமநல அபிவிருத்தித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் எஸ். ஜெயநாத் உட்பட கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் இளைஞர் அபிவிருத்தி அகம் இணைப்பாளர் ரீ. திலீப்குமார் அந்நிறுவன அலுவலர்கள், பயனாளிகளான கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் சமூக பொருளாதார அபிவிருத்திச் செயல்திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.

# ‘ஆடுகளும் ஓநாய்களும்’ கவிதை நூல் திருகோணமலையில் வெளியீட்டு விழா..!





(அ . அச்சுதன்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் நீங்களும் எழுதலாம் எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின் ‘ஆடுகளும் ஓநாய்களும்’ கவிதை நூல் வெளியீட்டு விழா கவிஞர் க . யோகானந்தன் தலைமையில் 09 -12-2023 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

முதன்மை அழைப்பாளர்களாக சாகித்ய ரத்னா மு.சிவலிங்கம் அவர்களும், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் ஏ.எப். எம் அஷ்ரஃப் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்

சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை.நவம் அவர்களும், ஓய்வுபெற்ற உப-பீடாதிபதி ந.பார்த்தீபன் அவர்களும் கலந்து கொண்டு

சிறப்பிக்க,நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம் நியாஸ் அவர்களும் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒ.குலேந்திரன் அவர்களும் ‘ஓசை’ சஞ்சிகை ஆசிரியர் மூதூர்.முகைதீன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையை ஊடகவியலாளர் அ.அச்சுதன் நிகழ்த்த நூல் அறிமுக உரையினை திருமதி.சௌ.சந்திரகலா வழங்கி வைத்தார்.

முதல் பிரதியை மூத்த எழுத்தாளர் சூசைஎட்வேட் அவர்கள் நூல் ஆசிரியரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.நூலின் நயவுரையை கவிஞர்.லலிதகோபன் வழங்கினார். விமர்சன உரையினை முதன்மை விருந்தினர் பேராசிரியர்.ஏ.எப்.எம் அஷ்ரஃப் வழங்கினார்.நாடறிந்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா.மு.சிவலிங்கம் அவர்கள் முதன்மை அழைப்பாளர் உரையை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்.ந.பார்த்தீபன் அவர்கள் சிறப்பு விருந்தினர் உரை வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.ஆர் தனபாலசிங்கம் வழங்கினார்.நிகழ்ச்சித் தொகுப்பினை அதிபர் திருமதி.சுஜந்தினி வழங்கினார். எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் ஏராளமானோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# பால்நிலை சமத்துவம், போதைப் பொருள்பாவனைகளை ஒழித்தல் தொடர்பான விழிப்புணர்வு





(ரக்ஸனா)

பால்நிலை சமத்துவம் மற்றும் போதைப் பொருள்பாவனைகளை ஒழித்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வென்று மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை(08.12.2023) இடம்பெற்றது.



வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆலய மற்றும் கிராம பொது நிர்வாக அமைப்புக்களின் பிரதிநிதிகள், என பலர் கலந்து இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கலந்துகொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகளினால் மாணவர்கள் மத்தியில் பால்நிலை சமத்துவம் மற்றும் போதைப்பொருள்பாவனையின் தீமைகள் தொடர்பில் விரிவாக தெளிவூட்டப்பட்டதுடன், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டதுடன.

இவ்விடையங்கள் தொடர்பில் தகவர்களை வழங்குவதற்கு இதன்போது விசேட குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன், மேலும் அவைதொடர்பான விளக்கங்கள் அடங்கிய துண்டுபிரசுரங்களும் மாணவர்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

## சொல்லத் துடிக்குது மனசு ; 19

# மட்டக்களப்பில் வீடும் வழிபாடும் நம்பிக்கைகளும்



வீடும் வழிபாடும் நம்பிக்கையும் மக்களின் வாழ்வியலையும் மாற்றி விடுகின்றன...



சின்னத்தம்பி குருபரன்

நதிக்கரையோரங்களை அண்டி நிலையான வாழ்க்கையை ஆரம்பித்த மனிதன் தனக்கென இருப்பிடத்தையும் குடும்பக் கட்டமைப்பையும் உருவாக்கிக் கொண்டான். ஆரம்பத்தில் மரம், கம்பு, இலை, குழை, கொத்து ஆகியவற்றைக் கொண்டு பந்தல்களும் பின்னர் பரண், சிராம்பி, புரை, வாடி, குடில், குடிசை ஆகியவற்றையும் தமது வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். காலப் போக்கில் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்கவே பிறப்பு, வாழ்வு, வழிபாடு, இறப்பு என்பவற்றுக்கெல்லாம் ஏற்ற வகையில் தமது வசதிக்கேற்ப பெரிய வீடுகளையும் அமைத்துக் கொண்டனர். பிற்காலத்தில் சமூகக் கட்டமைப்பில், வாழ்வியல் அம்சங்களில் பல புதுமைகள், மாற்றங்கள் ஏற்படுவதற்கு வீடுகள் காரணமாக அமைந்தன. மட்டக்களப்பில் வீடுகள் அமைப்பதற்கு முன்னர் வளவுக்கு (வீட்டுக் காணி) வேலி அடைப்பார்கள். ஆரம்ப காலத்தில் இலை, குழை, கொத்துக்களாலும் காலப்போக்கில் காட்டு மரங்கள், கட்டைகள், கம்பு, தடிகளைக் கொண்டும் பாதுகாப்பான வேலி அமைத்தார்கள்.

### வேலி அமைத்தல்

வீட்டு வேலிகளைஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன்னர் வைரவேலி, வரிச்சு வேலி, கிட்டி வேலிகளையே பெரும்பாலும் அமைத்தனர். வைரமான வைர மரங்களைக் கொண்டு அமைக்கப்படும் வேலி வைர வேலி எனவும், சிறிய கட்டைகள், கம்புகளை நட்டு வரிச்சுப் பிடித்து அமைக்கப்படும் வேலிகள் வரிச்சு வேலிகள் எனவும், ஓரளவான கப்பு, தடிகளை நட்டு, இருபுறமும் மாவரை வைத்துக் கிட்டி பிடித்து அமைக்கப்படும் வேலிகள் கிட்டி வேலிகள் எனப்படும். பிற்காலத்தில் கட்டை, கம்பி வேலி, மதில் அமைத்தல், கொங்கிறிட் கட்டை, கம்பி அல்லது தகட்டினாலும் வேலி அமைத்து வீடு, வளவுகளைப் பாதுகாத்து வருகின்றனர். அத்தொடு வளவுக்கு வாசல் முக்கியமானது என்பதனால் வசதிக்கேற்ப உழலை, படலை, தட்டி ஆகியவற்றையும் அமைத்துக் கொண்டார்கள். பிற்காலத்தில் மரம், இரும்பு, தகட்டினாலான பாதுகாப்பான கேற்றுகளையும் (வாசல்வழிக் கதவு) அமைத்து வருகின்றனர். வாசல் கதவினை பெரும்பாலும் கிழக்கு. வடகிழக்கு, தென்கிழக்கு, தெற்குத் திசைகளில் அமைத்துக் கொள்வார்கள்.

### வீடு அமைத்தல்

மட்டக்களப்பில் வீடு அமைக்கும் பொறுப்பு வீட்டுத் தலைவனைச் சார்ந்ததாகும். வீட்டுத் தலைவன் இல்லாத பட்சத்தில் மனைவி, மக்கள், சகோதரங்களும் பொறுப்பெடுத்துக் கட்டுவார்கள். வீடு அமைப்பதற்கு வளவுக் காணியின் நீள, அகலங்களைக் கணிப்பிட்டு அதக்கு ஏற்பவே வீடு கட்டுவதற்கு நிலையம் எடுப்பார்கள். இந்துக்கள் நிலையம் எடுக்காமல் வீடமைக்கமாட்டார்கள். இவை தொடர்பாக முன்னைய கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. ஒரு சுப முகூர்த்த தினத்தில் சாத்திரியார் அல்லது ஒரு சில குருக்கள்மாரைக் கொண்டே வீட்டுக்கு நிலையத்தினை எடுப்பார்கள். வீட்டைப் பொறுத்தவரை நியைமெடுத்தல், கால் நாட்டுதல் அல்லது, கல்வைத்தல், முகட்டு வளை வைத்தல், கதவு நிலை வைத்தல், குடிபுகுதல், விளக்கு மறைத்தல் ஆகியன பிரதான செயற்பாடுகளாக அமையும். வீட்டு நிலையம் எடுப்பதற்கான மரபு வழியான நடைமுறைகள் மற்றும் மனையடி சாத்திரம், உள்ள முடையான், சரசோதிமாலை ஆகிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு கணிப்பிட்டு இரண்டு அல்லது மூன்று அறையும் மண்டபமும் உள்ளடங்கத்தக்கதாக நிலையத்தினை எடுத்துக் கொள்வார்கள். பொதுவாகத் தெற்குப் புறமாக அமைந்த வடக்கு வாசல் வீடுகள் அந்தணர்களுக்கும், மேற்குப் புறமாக அமைந்த கிழக்கு வாசல் வீடுகள் சத்திரியர், வைசியர்களுக்கும், வடக்குப் புறமாக அமைந்த தெற்கு வாசல் வீடுகள் சூத்திரர்களுக்கும் உரியதென நம்பி வீடுகளை அமைத்துக் கொண்டார்கள். மட்டக்களப்பில் பெரும்பாலும் கிழக்கு, தெற்கு வாசல் வீடுகளையே கட்டிக் கொண்டனர். தற்காலத்தில் வளவின் அளவு, போக்குவரத்து வசதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கு, வடக்கு வாசல் வீடுகளையும் அமைத்துக் கொள்கின்றனர்.

வீடுகள் வைக்கோல், தென்னோலைக் கிடுகு, புல்லுகள், தளப்பத்து, பாரமேற்றி வாட்டிய பனை ஓலை ஆகியவற்றாலும் வேயப்பட்டன. ஆரம்ப காலத்தில் குடிசைகள், களிமண் வீடுகளே பெரும்பாலும் அமைக்கப்பட்டன. 1940 களுக்கு முன்னர் வசதி படைத்தவர்கள் நிலத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட குட்டைக் கல், களிமண் அல்லது சுண்ணாம்பு நீற்றுச் சாந்து ஆகியவற்றை கொண்டு வீடமைத்துக் ஓலைக் கிடுகு, நாட்டோடு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கூரை போட்டுக் கொண்டார்கள். பின்னர் கருங்கல், செங்கல், சீமந்து ஆகியவற்றைக் கொண்டு வீடமைத்து, கிடுகு, சாதாரண ஓடு, தகடு, அஸ்பெற்றஸ் சீற்றுகள் ஆகியவற்றைக் கொண்டு கூரை அமைத்து வருகின்றனர். தற்காலத்தில் ஓலைக் கிடுகுகளைப் பயன்படுத்துவது அருகிக் கொண்டு வருகின்றன. வீட்டுக்கு வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்காக கிணற்றினையும், வடகிழக்கு, கிழக்குத் திசைகளில் சமையல் குடிலையும் (குசினி), தென்மேற்கு, மேற்கு, வடமேற்குத் திசைகளில் மலசல கூடத்தினையும் அமைத்துக் தொண்டார்கள். வீட்டின் பின்புறம் கிடுகுகளால் மறைத்துச் சலங்கழிப்பதற்காகக் கோடி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலானோர் மலம் கழிப்பதற்கு கிராமத்தின் அருகிலுள்ள காடுகளையும், நீர்க்கரைகளையும் நாடுவார்கள்.

வீடுகளின் நாற்புறமும் தாள்வாரம், விறாந்தை, திண்ணையும், ஒரு புறத்தில் பொருட்கள், தட்டு முட்டுச் சாமான்களை வைப்பதற்காகச் சிராம்பி, பரண்களையும் அமைத்துக் கொள்வார்கள். ஒரு சிலர் மாத்திரமே யன்னல் வைத்து வீடுகளைக் கட்டினார்கள். சில வசதி படைத்த போடிமார் மூன்று அறை, மண்டபத்துடன் வீட்டுக்குள்ளே கொட்டறை, கிட்டங்கி, சிராம்பி ஆகியவற்றையும் அமைத்துக் கொண்டனர் இவற்றில் நெல்லைச் சேமித்து லைப்பதற்கும், பொருட்களை வைப்பதறகும் பயன்படுத்தினர். இந்துக்களின் சகல வீடுகளிலும் சுவாமி அறை காணப்படும். வீட்டுக்கு வெளியே தென்கிழக்குப் புறமாக வைரவர் பந்தலும் அமைக்கப்பட்டிருக்கும். சமய, சம்பிரதாயங்களுக்குரிய சகல நிகழ்வுகளும் சுவாமி அறை, வைரவர் பந்தல் ஆகியவற்றிலேயே நடைபெறும். பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வுக்கும், நன்மைக்குமான மங்கல, அமங்கல நிகழ்வுகள் யாவும் வீடுகளிலேயே நடைபெற்றன. அதனால் வீடுகள் விரதானமான அலகாகக் கொள்ளப்பட்டன. கோயில்களுக்கு அடுத்தபடியாக வீடுகளை மக்கள் மதித்தனர். புனதமான இடமாகவும், உரிமையைப் பேணுகின்ற இடமாகவும் வீடுகளை மதித்தனர். பாரம்பரியமாகத் தலைமுறை தலைமுயைாக மரபு, பண்பாடு பழக்க வழக்கம், சம்பிரதாயம், மரியாதை, கீழ்ப்பணிவு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வுடன் கூடிய ஒழுக்க, விழுமியங்கள் ஆகியவற்றைக் கைமாற்றுகின்ற இடமாகவும் வீகள் கொள்ளப்பட்டன. பல வீடுகளில் கூட்டுக் குடும்பமாகப் பல தலைமுறைகள் வாழ்ந்த வந்தனர்.

### மரபுகளும் சமய வழிபாடும் சம்பிரதாயங்கள்

மரபுகள், சமய, பிரதாயங்கள் என்பவற்றை அனுசரித்தே வீட்டு நிகழ்வுகள் யாவும் நடந்தேறுகின்றன. தைப்பொங்கல், புதிரெடுததல், புதிர் உண்ணுதல், சித்திரைப் புதுவருடப் பிறப்பு, சர்க்கரை அமுது, ஆடிப் பூரணை அமுது, கார்த்திகை விளக்கீடு, பிறப்புடன் தொடர்பான நிகழ்வுகள், ஆண், பெண் பருவமெய்தலோடு தொடர்புடைய நிகழ்வுகள், திருமணச் சடங்கு நிகழ்வுகள், மரணச் சடங்கு நிகழ்வுகள் போன்றன ஊர் ஒற்றுமையின் வெளிபபாடாக வீடுகளில் நடந்தேறின. தற்காலத்தில் இவற்றுள் பல நிகழ்வுகள் மண்டபங்களை வாடகைக்கு எடுத்துப் பெருஞ் செலவுடன் நடத்தப்படுகின்றன. முன்பெல்லாம் பெரும்பாலான வீட்டு நிகழ்வுகள் கைக்கடக்கமாகச் சிக்கனத்துடன் நடத்தப்பட்டன. நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரமே அழைப்புகள் விடுக்கப்பட்டன. இப்போது போட்டி போட்டுக் கொண்டு தனது கௌரவத்தையும், செல்வாக்கினையும் வெளிப்படுத்துவதற்காகப் பல வீட்டு நிகழ்வுகள் ஆடம்பரமாக மண்டபங்களில் நடத்தப்படுகின்றன. இதனைப் பார்த்த பலரும் பொல, ஒப்ப என்பதற்கிணங்க மண்டபங்களில் ஆடம்பரமாக நடத்தி ஆப்பிழுத்த குரங்கு போல் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவைகளைப் பார்த்துங்கூட திருந்த முடியாத பகுத்தறிவு கொண்டவர்களாகப் பலர் காணப்படுகின்றனர். இன்றும் பலர் மரணச் சடங்கு நிகழ்வுகளையும் ஆடம்பரமாக ஆக்கிவிட்டனர். பெரும்பாலான வீடுகளில், பிறியாணிச் சாப்பாடு, தண்ணீர்ப் போத்தல், மென்பானங்கள், ஐஸ்கிறீம் கொடுக்கும் வழக்கினையெல்லாம் பலர் உருவாக்கி விட்டார்கள். பலர் எங்கும் எதிலும் ஆடபரமாகச் செயற்படப் பழகிக் கொண்டனர். இன்றைய வாழ்க்கைச் செலவு நெருக்கடியான சூழ்நிலையிலும் ஆடம்பரங்களைத் தவிர்த்து நிகழ்வுகளை நடத்த முன்வருவதாகத் தெரியவில்லை.

முன்பெல்லாம் பெரும்பாலான வீட்டுச் சடங்குகளும், நிகழ்வுகளும் வீட்டுத் தலைவர், வீட்டில் உள்ள பெரியோரைக் கொண்டும் அல்லது அவர்களின் முன்னிலையிலும் உறவினர், சுற்றத்தாரும் ஊர் மக்களும் கூடி இருக்க வெகு சிறப்பாக நடத்தப்பட்டன. இப்போதெல்லாம் பல வீட்டு நிகழ்வுகள் ஆரிய வேத, ஆகமயப்படுத்தபட்டுக் கோயில் ஐயர்மாரைக் கொண்டு நடாத்தும் ஆடம்பர வழக்கம் கண்மூடித்தனமாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்து, சித்தாந்த பாரம்பரிய முறைப்படி நடக்க வேண்டிய நிகழ்வுகள் ஆரிய வேத, ஆகம முறைப்படி குருக்கள்மாரின் இஷ்டப்படி நடாத்தப்படும் முறைகளுக்குப் பலர் மாறிவிட்டனர். ஒவ்வொன்றையும் நிகழ்த்துவதற்கு எங்களுக்கென்ற மரபுகள், சம்பிரதாயங்கள், பாரம்பரிய முறைகள் இருக்கின்றன. அவற்றை மறந்து போல, ஒப்ப எனப் பல குருக்கள்மாரின் வர்த்தக மயமான அறிவுறுத்தல்களுக்கு இணங்க நிகழ்வுகள் ஆடம்பரமாக நடத்தப்படுகின்றன. இன்னும் சில நிகழ்வுகளைப் புகைப்படம் மற்றும் வீடியோ படம் எடுப்பவர்களும், பேசியல் செய்பவர்களும் தீர்மானிக்கிகறனர். கைக்கடக்கமாகச் சிக்கனமாகச் செய்ய வேண்டிய பல நிகழ்வுகள் ஆடம்பரமாகிக் கையை மீறிச் சென்றுவிட்டன. ஒவ்வொருவரும் தாமாகத் திருந்தும்வரை இவற்றை மாற்றுவது



சிரமம்தான். மட்டக்களப்பில் உள்ள கிராமங்களில் பெரும்பாலும் பிள்ளையார் கோயில் ஒன்றிருக்கும். அத்தோடு அம்மன் கோயிலும் அங்காங்கே முருகன், நாகதம்பிரான் கோயில்களும் ஒரு சில இடங்களில் சிவன், விஷ்னு, வீரபத்திரர், வைரவர், ஐயனார், பரமநயினார் கோயில்களும் காணப்படுகி'ன்றன. இவற்றுடன் மக்கள் பின்னிப் பிணைந்தவர்களாக வழிபாடு, பாரம்பரியம் பழக்க வழக்கங்களோடு வாழ்ந்து வருகின்றனர். தினசரிப் பூசைகள், விசேட பூசைகள், வருடாந்தச் சடங்குகள், உற்சவங்கள் பரிகார பூசைகள், கும்பாவிசேகம், சங்காபிசேகம், விசேட தினங்கள், திதிகள், விரதங்கள் என்றெல்லாம் மக்கள் கோயிலோடு இணைந்திருக்கின்றனர். இவை பண்டு தொட்டு நடந்து கொண்டிருக்கின்றன. பூசைகள், விரதங்கள், விழாக்கள், சடங்குகள் ஆகியவற்றால் பல பல கோயில்கள் களைகட்டிக் கிடக்கும். இந்து மதத்தில் பெரும்பாலான தினங்கள் விரதங்களோடு தொடர்பு பட்டவை. சகல மாதங்களிலும் விரத தினங்கள் காணப்படும். அதிலும் புரட்டாதி மாதம் ஆரம்பித்துவிட்டால் நவராத்திரி, கேதார கௌரி, கந்த சஷ்டி, விநாயகர் காப்பு, திருவெம்பாவை விரதங்கள் என ஐந்து மாதங்கள் பெரும்பாலான கோயில்கள் களைகட்டிக் கிடக்கும். அத்தோடு புரட்டாதிச் சனி விரதம், பிரதோச விரதம், கார்த்திகை விளக்கீடு, தீபாவழி, சனிப் பிரதோச விரதம், திருப்பாவை விரதம், தைப்பொங்கல் என இன்னோரன்ன பலவும் பல ஆலயங்களில் நடைபெறும். சிலர் புரட்டாதிச் சனி விரதத்தில் ஆரம்பித்து திருவெம்பாவை வரை விரதம் அனுட்டிப்பார்கள். விரதங்களில் பெரும்பாலானோர் அனுட்டிக்கும் விரதங்களாக சிவராத்திரி, கேதார கௌரி, கந்த சஷ்டி ஆகிய விரதங்கள் அடங்குகின்றன.

கோயில், தெய்வங்கள், வழிபாடு என்பவற்றில் முன்னோர் அபார நம்பிக்கை வைத்திருந்தனர். கோயிலில் ஏதாவது விசேட நிகழ்வுகள் என்றால் குடும்பத்துடன் ஊர்கூடி நிற்பார்கள். நிகழ்வு தொடங்கி முடியும்வரை அத்தனை நாளும் ஊரெல்லாம் பக்தி பூர்வமாகக் காணப்படும். ஒவ்வொரு நிகழ்வுகளிலும் வேலைகளைப் பொறுப்பெடுத்துப் பக்தி சிரத்தையோடு உணர்வு பூர்வமாகச் செய்து முடிப்பார்கள். பிரதான நாட்கள், விசேட தினங்களில் மது, மச்சம், மாமிசம் என்பவற்றை விலக்கி வைத்து அதுக்கென உள்ள பாத்திரங்களில் ஆச்சாரமான முறையில் வேறு இடத்தில் மரக்கறி வகைகளைச் சமைப்பார்கள்.

வயலில் விளைந்த நெல் புதிரெடுத்துப் புதுநெல் வீட்டுக்குக் கொண்டுவந்து புதிருண்ணும் வரை வேறு எங்கும் உணவு உண்ணமாட்டார்கள். ஆலயங்களில் புதிருண்ணும் தினத்தன்று ஊரிலுள்ள பெரும்பாலானோர் புதிருண்ணுவார்கள். அன்றைய தினத்தை விசேட தினமாகக் கொள்ளுவார்கள். அன்றைய தினத்தில் வீட்டில் உள்ள ஒருவர் இல்லை எனில் அவர் வீடு திரும்பும் நாள்வரைக்கும் காத்திருந்து அவர் வந்த பின்னர் சுபமுகூர்த்த வேளையில் புதிர் பொங்கி சுவாமிக்குப் படைத்து வழிபட்ட பின்னர் பாய் விரித்து எல்லோரும் அமர்ந்திருக்க வாழை இலையில் பொங்கல், அரிசிமாக் கூழ், தயிர், உரித்த வாழைப்பழம் ஆகியவற்றை வீட்டுத் தலைவி பரிமாற எல்லோரும் புதிருண்ணுவார்கள். வசதி உள்ளவர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் புது நெல் கொடுப்பார்கள் அதேபோல் கோயிலிலும் புது நெல் வழங்கி அவர்களையும் குறித்த தினத்தில் புதிருண்ணுமாறு கூறுவார்கள். நாப்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலுள்ள கிராமங்களில் இம்மரபுகள், சம்பிரதாயங்களைப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். தற்காலத்தில் இவற்றுள் பல நடைமுறைகள் அருகிக் கொண்டு செல்கின்றன.

வீடுகளில் நடைபெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகள் யாவற்றிலும் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், சுற்றத்தார் ஊரவர்கள் யாவரும் பகை, விரோதம் மறந்து ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். வாழ்வு, தாழ்வு, நல்லது, கெட்டது ஏதாவது நடந்து ஆகிவிட்டால் பகை மறந்து ஒற்றுமையுடன் நிகழ்வுகளை நடாத்தி முடிக்க வேண்டும் எனக் கிராமங்களில் கூறுவார்கள். ஊரில் உள்ள ஒருவருக்கு ஏதாவது ஒன்று என்றால் ஊர் திரண்டு கூடிவிடும். ஊரில் நடக்கும் பொது நிகழ்வுகளில் ஊரே திரண்டு கருமங்களில் ஈடுபடும். குடும்பத்துக்குள், ஊரில் உள்ளவர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளை ஊர்க் கட்டுப்பாடுகளுக்கு இணங்க ஊர்ப் பெரியவர்கள் முன்வந்து பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். அவர்களால் தீர்த்து வைக்க முடியாத குடியியல், குற்றவியல்சார் பிரச்சினைகள் மாத்திரம் விதானையார், காவல்துறை, நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்வார்கள். இவ்வாறுதான் ஊர்க் கட்டுப்பாடுகளும் பழக்க வழக்கங்களும் பேணப்பட்டன.

இந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, நெறி முறைகள், கீழ்ப்பணிவு, மரியாதை ஆகியன வடக்கு, கிழக்கில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து படிப்படியாகக் குறைய ஆரம்பித்தன. இப்போது அவற்றுள் பெரும்பாலான கோயி'ல்கள், கிராம அமைப்புக்களின் தலைமைத்துவம் இளைஞர்களின் கைகளுக்கு மாறி விட்டன. அதனால் பல கோயில்கள், சமூக அமைப்புக்கள் ஆகியவற்றில் கூட்டம், ஒன்றுகூடல் ஆரம்பித்துவிட்டால் பெரும்பாலும் வாக்குவாதம், சச்சரவுகள் முரண்பாடுகளிலேயே முடிகின்றன. சில இடங்களில் அடிதடி, சண்டை, விசாரணை, நீதிமன்றம் என்று சென்றுவிடுவதனையும் காணக்கூடியதாக உள்ளன. இன்று உள்ளவர்கள் மத்தியில் மரியாதை, கீழ்ப்பணிவு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பெரியோருக்கு மதிப்பளித்தல் ஆகியன குறைந்து வருவதனைப் பலரும் குறையாகக் கூறி வருவதனைக் காண முடிகிறது. இப்போது பலர் திறன்பேசிகளில் அதீத அன்பு செலுத்த ஆரம்பித்துவிட்டதினையும் அவதானிக்க முடிகிறது.

*நீர் வளமும் நிலவளமும் நிறைந்த நம்*
*ஊரெனும் பேரூரே*

**ஊரெனும் பேரூர் தொடரும்..**

# எம் குருநாதர் சே.யோகராசா சென்றுவிட்டார்



கனவிலும் நினைக்கவில்லை இத்தனை விரைவாக எம் குருநாதரை நாம் பிரிவோமென்று. 2003 ஆம் ஆண்டு கிராமத்திலிருந்து வெளியுலகு தெரியாத ஒரு இளைஞனாக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். அங்கே தமிழ் கற்பிக்க வருகை தந்த விரிவுரையாளர் செ.யோகராசா சேரை எனக்கு மட்டுமன்றி எனது சக நண்பர்களுக்கும் நன்கு பிடித்துவிட்டது.

ஒரு புதுவிதமான முறையிலே அவர் ஒவ்வொரு விரிவுரையையும் முன்னெடுத்தார். குறியீட்டு மொழியிலே உடனடியாகப் பொருள் விளங்காத வகையிலே இடைக்கிடை கதைப்பார். அது அவர் கூறும் சிந்தனைக்கான நகைச்சுவையாக அல்லது கடி ஜோக்காக இருக்கும். சிரிக்காமல் சொல்லிவிட்டு அடுத்த விடயத்திற்கு வந்துவிடுவார். சற்று நேரத்தின் பின்தான் அவர் கூறியதன் கருத்தை உணர்ந்து நாங்கள் சிரிப்போம். ஆனால் அவர் ஒரு அசுமாத்தும் இல்லாமல் கற்பித்தலைத் தொடர்ந்துகொண்டிருப்பார். உதாரணமாக முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் இருந்தமை பற்றி ஆய்வாளர்களில் ஒரு பகுதியினர் கூறுகின்றனர் என்று சொல்லிவிட்டு நக்கலுக்காக இப்போதும் கடைச்சங்கம் இருக்குத்தானே என்பார். நிறைய நூல்களை வாசிக்க வழிப்படுத்துவார். நாங்களும் விரிவுரை முடிய வெவ்வேறு வழிகளினூடாக நூலகத்திற்குச் சென்று அவர்கூறிய நூல்களைத் பரபரப்புடன் தேடத் தொடங்குவோம். அதேவேளை அவரும் வாசிக்க நூல்களைத் தருவார். அவர் ஒரு பழைய டயறி ஒன்றினையும் கூடவே வைத்திருப்பார். மாணவர்களுக்கு தனது புத்தங்களைக் கொடுத்து வாங்குவதைப் பதிவுசெய்வதற்காக அதைப் பயன்படுத்துவார். உரிய நாளுக்குள் வாசித்துவிட்டுப் புத்தகங்களைப் பத்திரமாகக் கொடுத்தால் மகிழ்ச்சியடைந்து கொள்வார். அப்படிப்பட்டவர்களுக்கு வேறு புத்தகங்களைக் கொடுப்பார். விரிவுரைகளின்போது புதிய விடயங்களைக் கூறுவார். சிந்திக்க வைப்பார். சிரிப்பூட்டுவார். வகுப்பு கலகலப்பாக இருக்கும். இவற்றால் அவரை எங்கள் அனைவருக்கும் பிடித்துவிட்டது. அவரது தொடர்பு இப்படித்தான் வளர்ந்தது.

காலப்போக்கில் எனக்கு அவர் அறிவுத் தெய்வமாகிவிட்டார். நான் அவரது பக்தனாகிவிட்டேன். அவரது வார்த்தைகளைக் கொண்டாடத் தொடங்கினேன். அவருடன் நெருங்கிப் பழகினாலும் அவரிடம் பயமும் இருந்தது. ஆனால் எப்போதும் அவர் பிரம்பெடுத்ததுமில்லை. அடித்ததுமில்லை.

கவிதை எழுதும் ஆற்றலுள்ளவர்களை ஊக்கப்படுத்தினார். எனது இரண்டு கவிதை நூல்கள் அவரது ஊக்கத்தினால் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது வெளிவந்தன. நண்பர் சுஜந்தனையும் அவர் ஊக்கப்படுத்தினார். அவரது கவிதை நூலும் வெளிவந்தது.

2007 இல் தமிழ்ச் சிறப்புக் கற்கையை முடித்துவிட்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னரும் அவர் என்னை எழுதும்படி உற்சாகப்படுத்தினார். நல்ல செயற்பாடுகளைப் பாராட்டுவார். எங்களது ஆசிரிய - மாணவ உறவு முன்னரைவிடவும் மிகமிக நெருக்கமாகியது.

நான் அரசடித்தீவுக் கிராமத்திலிருந்து கல்லடிக்கு வாழ்பதியமைத்துக்கொண்ட பின்னர் பேராசிரியரை அடிக்கடி சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. உண்மையில் படுவான்கரையிலேயுள்ள தனித்துவங்களை விட்டு நகரத்தை நாடி வந்து பெற்ற பெருநன்மை பேராசிரியருடனான உறவை தொடர்ந்தும் பேணியமையும், அவருடைய நெருக்கமான - விசுவாசத்திற்குரிய மாணவர்களுள் ஒருவனாக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றதுமேயாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வரங்குகளில் கலந்துகொண்டு கட்டுரை சமர்ப்பிக்கவும் ஞானம், ஜீவநதி, மகுடம், தேனகம் முதலான சஞ்சிகைகளிலும் பிற ஆய்வுச்சஞ்சிகைகளிலும் கட்டுரை எழுதவும் தொடர்ந்தும் வழிப்படுத்தினார். எழுதாதபோது ‘மேகராசா உனக்குத் தந்;த காலக்கெடு முடிந்துவிட்டது. நீ விரைவாக எழுதியே ஆகவேண்டும்’ என்று கட்டளையிடுவார். இந்த விடயத்தை எழுது என்றும் சொல்வார். இன்னொரு விடயம் இவ்வாறு எனக்கு மட்டுந்தான் கூறுகின்றவர் என்றில்லை. ஏனைய அவரது மாணவர்களுக்கும் இவ்வாறே சொல்வதுதான் அவரது இயல்பு. அவர் மாணவர்களை வரையறுத்துக்கொண்டதில்லை. அதேபோன்று மாணவர்கள்களை ஏனையவர்களுடன் மோதவிட்டு குழுக்களாக்கி இயங்கியதுமில்லை. நான் இன்று என்னென்ன நூல்களை வெளியிட்டிருக்கிறேனோ, கட்டுரைகளை எழுதியிருக்கிறேனோ அவற்றை எழுத உயிரூட்டியவர் பேராசிரியர்தான். அவரால்தான் நானொரு படைப்பாளராகவும் ஆய்வாளனாகவும் வளர்ந்தேன். அவர் இல்லையெனில் நான் இந்நிலையை நிச்சயமாக அடைந்திருக்கவே மாட்டேன்.

2010 ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியருடன் இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். பேருந்து, புகையிரதம், மோட்டார் சைக்கிள் என பேராசியருடன் பயணங்கள் தொடர்ந்தன. முதன்முதலில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு ஆய்வரங்கிற்காக இருவரும் இரவுப் பயணத்தைத் தொடர்ந்தோம். அவர் என்னருகிலிருந்து நூல்களை வாசித்துக்கொண்டே வந்தார். எனக்கும் நூல்களைத் தந்தார். நானும் வாசித்துப்பார்த்தேன். அவரைப்போன்று தொடர்ந்து வாசிப்பது சிரமமாக இருந்தது. நான் நித்திரைகொண்டு எழும்போதெல்லாம் அவர் நூல் ஒற்றைகளைப் புரட்டி மகிழ்ந்துகொண்டிருந்தார். பேருந்து அதிகாலை 3.30ற்கு யாழ் பேருந்து நிலையத்தை அடைந்தது. விடிந்த பின்பு கரணவாய் - கரவெட்டிக்குச் சென்று அதன் பின்னர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதுதான் திட்டம். பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் இருக்கையுள்ள இடத்தைக் காட்டி, யாழ்ப்பாணம் வந்தால் விடியும்வரை இதிலிருந்து நூல்களை வாசித்துவிட்டு போவதுதான் எனது வழமை. அதற்கும் சேர்த்துதத்தான் வாசிக்க புத்தகங்;;களைக் கொண்டுவந்திருக்கிறேன் என்றார். வெளிச்சமுள்ள இடத்திலிருந்த அவர் உடனே வாசிப்பில் மூழ்கிவிட்டார். அவருடன் பயணம் செய்த முதலாவது சந்தர்ப்பம் அதுவென்பதால் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன். பின்னர் அவரது அத்தகைய செயற்பாடு எனக்கு ஆச்சரியம் தருவதில்லை: அவர் பேருந்து பற்றுச்சீட்டில் கட்டுரை எழுதுவதற்கான குறிப்புக்களை எழுதிக் கொள்வது வரை.

அவர் தனது மனைவியை, மகளை மிகவும் நேசித்தவர். அவர்களை எச்சந்தர்ப்பத்திலும் கலங்கச் செய்யாதவர். அவரது குடும்பத்துடன் எனக்கு உறவு ஏற்பட்டது. சேரின் துணைவியாரை நான் அக்கா என்று அழைக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். இன்றுவரை அது தொடர்கிறது.

பேராசிரியர் என்ற தனது பதவியை முன்னிறுத்தாது சிறுவர் - பெரியவர், தமிழர் - சிங்களவர், யாழ்ப்பாணத் தமிழர் - கிழக்குத் தமிழர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்றெல்லாம் எவ்வித பாகுபாடும் காட்டாது அனைவருடனும் பழகியவர். எந்த அரசியல் குழுவாதங்களுக்குள்ளும் நுழையாதவர். ஆனால் தனக்கென்றொரு அரசியலை உறுதியாகப் பற்றி நின்றவர். அவர் மனிதர்களை மட்டும் நேசித்தவரல்லர். நாய், பூனை முதலான ஜீவராசிகளையும் நேசித்தவர். காலையில் தனது வீட்டில் வாழும் பூனைக்கும் பால்நீர் கொடுத்துவிட்டுத்தான் புறப்படுவார். ஒருமுறை பூனைக்கென வைத்த பாலை அது குடிக்கவில்லை. ஏனோ தெரியவில்லை என்று கூறிக் கவலைப்பட்டார்.



அவர் ஓயாமல் வாசித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தவர். எத்தகைய விருப்புடன் அவற்றை வாசித்தாரோ அதேவிருப்புடன் அதனை மற்றையவர்களுக்குக் கொடுக்கும் அறிவுக்கொடையாளராகவும் விளங்கினார். எந்த நேரத்தில் தொடர்புகொண்டாலும் பேசக்கூடியவர். தவற விட்டால் அவரே தொடர்புகொள்வார். அதனால் எந்த நேரத்திலும் அவரிடமிருந்து தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அவர் ஒருபோதும் நேரமில்லையென்றோ, நோய் என்றோ, இரவாகிவிட்டது நாளை எடுங்கள் என்றோ சொல்லியதில்லை. அதனால் அவர் பல நூல்களை எழுதியிருந்தும் அவற்றை நான் சேகரித்து வைக்;கவில்லை. காரணம் பல நூல்களின் ஆசிரியரே எமக்கு வழிகாட்டியாக இருக்கின்றார் என்ற திடமான நம்பிக்கை. அவரிடம் உரையாடி, எழுதியதை அவரிடம் காட்டிச் சரிபார்த்தே அனைத்து ஆய்வு வேலைகளையும் செய்த எமக்கு அவரது இழப்பு பேரிழப்பாகும். அடுத்து என்ன செய்வதென்ற திண்டாட்ட மனதை அழுத்திக் கொல்கிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தபோது ஈழத்து நவீன இலக்கியத்தையும் ஒரு பாடமாகக் கற்றவர் பேராசிரியர். அது பின்னாளில் அவருக்கு பெரிதும் கைகொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். கலாநிதிப் பட்டத்தினையும் கவிதைத்துறையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட அவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். தனக்கான தனித்துவமான ஆய்வு முறையியலினூடாக பல்வேறு ஆய்;வுகளை மேற்கொண்டார். புதுப்புது விடயங்களைக் கண்டறிந்தார். தான் எழுதியது பிழையென்று தெரிந்தும், அதனை ஒப்புக்கொண்டால் தனக்கு அவமானமென்று பிடிவாதம் பிடிப்போருக்கு மத்தியில், அவர் எழுதிய சில ஆய்வுகளை அவரே பின்னாளில் மறு ஆய்வுக்கும் உட்படுத்தியுள்ளார். அந்த நேர்மையும் அவரிடம் இருந்தது.

ஆரம்பத்தில் அவரொரு கவிஞராகவும் மெல்லிசைப் பாடலாசிரியராகவும் சிறுகதையாசிரியராகவும் இருந்தவரென்பதால் படைப்பாளிகளை நேசித்தார். அவர்களது படைப்புக்களுக்கு முன்னுரைகளை எழுதினார். அப்படைப்பாளர்களது ஆக்கங்களை ஒற்றைத் தராசை வைத்து அவர் அளவிடவில்லை. வித்தியாசமான பல தராசிகளை வைத்திருந்தார். ஒவ்வொருவரையும் தனித்தனியாகவே மதிப்பிட்டார். ஒருவரது நூலிலுள்ள ஆக்கங்களுள் குறைந்தது ஒன்றோ, இரண்டோ சிறப்பியல்புகள் - தனித்துவங்கள் இருந்தாலும் அதனையும் கூர்ந்து கண்டறிந்து அந்தவழியில் சென்றால் எதிர்காலத்தில் இலங்கலாம் என்று பாதையமைத்து அப்பாதைக்கு ஒளியும் ஊட்டினார். படைப்பாளர்கள் அவ்வழியில் செல்லாதுவிட்டால் அதற்கு அவர் எப்படிப்பொறுப்பாக இருக்கமுடியும். ஈழத்திலே முன்னுரைகள் அதிகமாக எழுதியவர் பேராசிரியரே. பொது நோக்கில் இலக்கிய அக்கத்தைப் பார்க்காது அந்தந்தப் பிரதேசப் பின்புலத்தில் வைத்தே குறித்த ஆக்கத்தை நோக்கினார். உதாரணமாக வாகரைப் பிரதேசத்திலிருந்து ஒரு கவிதைத் தொகுப்பு வருவதாயின் அங்குள்ள கற்றலுக்கான - வாசிப்பதற்கான சூழல்; எத்தகையது, குறித்த படைப்பாளரது கல்வித் தரம் எத்தகையது, அங்குள்ள இலக்கியச் சூழல் எத்தகையது என்பனவற்றையெல்லாம் யோசித்தே படைப்பாளரின் தனித்துவங்களையும், இயலுமைகளையும் வெளிப்படுத்தினார். தனது இத்தகைய மதிப்பீட்டு ஆய்வு முறையினை சிலர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்ற கவலையும் அவரிடமிருந்தது. அதனை என்னிடம் கூறியுமுள்ளார்.

பேராசிரியர் நூல்களை மட்டும் வாசிக்கவில்லை. பேரறிஞர்கள், பிற ஆராய்ச்சியாளர்களின் உரைகளைக் கேட்பதையும் பெரிதும் விரும்பினார். இவ்வருடம்(2023) ஆவணி மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆய்வரங்கின் சிறப்புரையினை தமிழகப் பேராசிரியர் மணிகண்டன் அவர்கள் ‘தமிழில் அற இலக்கியங்கள்’ என்ற தலைப்பிலே 100 நிமிடங்கள் உரையாற்றினார். என்னருகிலிருந்த பேராசிரியர் செ.யோகராசா சேர், உரை நிறைவடைந்ததும் என்னிடம் கூறினார் ‘இந்த ஆய்வரங்கிற்கு வராமலிருந்திருந்தால் நான் எவ்வளவு விடயங்களை இழந்திருப்பேன்’ என்று. அதேபோன்று பேராசிரியராகி ஓய்வு பெற்ற பின்னரும் தனது ஆய்வுக் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தவேண்டுமென்ற ஆர்வத்தோடு எங்கெங்கு ஆய்வரங்குகள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் பயணம்செய்தார்.

நூல்வெளியீடுகள், பிரதேச விழாக்கள், கவிதை, சிறுகதைப் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் அனைத்திலும் விருப்போடு கலந்துகொண்டார். அதனால் இலங்கையின் எப்பாகத்திலும் அவர் அறியப்பட்ட ஒரு பேராசிரியராகக் காணப்பட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஒரு நூலாசிரியரோ, அவரது படைப்போ நினைவுக்கு வரவில்லையென்றால் அல்லது உடனடியாகத் தேவைப்பட்டால் சிறியவர், பெரியவர் என்றோ, இவரிடம் கேட்டால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார் என்றோ ஆராய்ந்து கேட்பவரல்ல. எல்லோரிடமும் கேட்பார். அவ்வாறு அவர் கேட்டதை வைத்து ரியூசன் மாணவர்களிடம் அரசியல் செய்தவர்கள் பற்றியும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அதனையவர் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அதற்கு அவரிடம் நேரமும் இருந்ததில்லை.

அவர் யாரைப் பற்றியும் யாரிடமும் குறை சொல்லியதில்லை. பொறாமைப்பட்டதில்லை. பிறரிடம் குறைகண்டு முகநூலில் எழுதியதில்லை. முகநூலே அவருக்கு இருந்ததில்லை. தனது தேவையை நிறைவேற்றுவதற்காக ஒழுங்கற்ற தன்மையை கையாண்டதில்லை. அறத்தையும் ஒழுங்கையும் பின்பற்றினார். தன்னை விமர்சித்தவர்களுக்கு மறுப்பறிக்கை எழுதியதில்லை. ஆனால் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். மெல்லிய புன்னகையாலும், மௌனத்தாலும் சவால்களைக் கடந்தார். மென்மையே வாழுமென்ற கருத்தை நிரூபித்தார்.

74 வயதுவரை வாழ்ந்தாலும் 150 வயதுக்கான ஆய்வுப்பணியை அவர் செய்துள்ளார். ஈழத்து நவீன இலக்கியம், தமிழக இலக்கியம், உலக இலக்கியம், மரபு இலக்கியம், இடைக்கால இலக்கியம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், இலக்கணம் (இறுதிக் காலத்திலே ஈழத்தின் இலக்கண முன்னோடிகள் பற்றிய ஆராய்ச்சியிலேயே அதிகம் ஈடுபட்டார்), பெண்ணியம், பின்காலனித்துவம், பின்நவீனத்துவம் உள்ளிட்ட கோட்பாடுகள் சார்ந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். இருபதுக்கு மேற்பட்ட நூல்;களையும் இருநூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். கிழக்கிலங்கை விமர்சன வளர்;ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். அது தனியாகப் பேசப்படவேண்டியதொன்று.

அவர் ஆயிரக்கணக்கான மாணவர்களின் பேராசான். குருநாதர். பல மாணவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்டியவர். மலையகத்தில் தான் கற்பித்த காலத்தில் பெருங்கல்விப்பணி ஆற்றியவர். மலையக சமூக எழுச்சிக்கான மெல்லிசைப்பாடல்களை எழுதியவர். அவர் பயணம்செய்யும்போது மலைச்சார்களில் நின்று மாணவர்கள் தான் எழுதிய பாடல்களைச் சத்தமாகப் பாடி மகிழ்வார்கள் என்றும் அதனைக்கண்டு தான் பல தடவை மகிழ்ந்ததாகவும் கூறியிருக்கிறார்.

பெண்கள் இலக்கியம், முன்னோடிகள், புதிய கண்டறிதல்கள் சார்ந்த ஆய்வுகளை நூலாக்கவேண்டுமென்று பேராசிரியர் ஆசைப்பட்டார். அவரது மாணவர்களும் அவரது நண்பர்களும் நிச்சயம் அதனை நிறைவேற்றவேண்டும். அவர் மேற்கொண்ட பணியை, அவரது முன்மாதிரியான வாழ்வை பின்தொடர வேண்டும். அதுவே அவருக்குச் செய்யும் கைமாறாக அமையும்.

**Arasaiyoor Mera வின்**

**முகப்புத்தகத்திலிருந்து**

# எனக்கு எட்டு வயதாக இருந்தபோது, இனக்கலவரத்தில் எனது வீடு எரிக்கப்பட்டது! அதிலிருந்து எனது உரிமைப் போராட்டம் ஆரம்பமாகியது

## மனித அபிவிருத்தி தாபனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் பி.லோகேஸ்வரி

( வி.ரி. சகாதேவராஜா)

திருமதி லோகேஸ்வரி பெருந்தோட்டத்துறையில் மலையக தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை முன்னெடுப்பது அவரது பணிகளில் அடங்கும். சர்வதேச மகளிர் மனித உரிமைப் பாதுகாவலர் தினத்தையொட்டி, தனது நாட்டில் மனித உரிமைப் பாதுகாவலராகப் பணியாற்றியதைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக பதிவு இலங்கையில் ஐக்கிய நாடுகள்சபையின் பெண்கள் அமைப்பின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்..



எனக்கு எட்டு வயதாக இருந்தபோது, இனக்கலவரத்தில் எனது வீடு எரிக்கப்பட்டது. இதன் காரணமாக எனது பள்ளிக்கற்கை மூன்று மாதங்களுக்கும் மேலாக பாதிக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, நான் நாட்டில் பெண்கள் உரிமை ஆர்வலர்களின் பட்டறைகளில் கலந்து கொண்டபோது, அவர்களின் ஊக்குவிப்பு என்னை மேலும் இத்தகைய வேலைத் திட்டங்களில் ஈடுபடுவதற்கு காரணமாக அமைந்தது. கடந்த 25 ஆண்டுகளாக, பெண்கள், சிறுவர்கள், சிறுபான்மையினர் மற்றும் பெருந்தோட்டத்துறையில் உள்ள மக்கள் சார்பாக செயற்படுவதற்கு எனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளேன்.

மலையக தமிழ் சமூகம் இலங்கையில் 200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ளது. மேலும் நாட்டின் சனத்தொகையில் 4.7 வீதத்திற்கும் அதிகமானவர்கள் மலையக பெருந்தோடட் மக்களாக இருந்தாலும், அவர்கள் தொடர்ந்தும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில், குறைந்தபட்சம் 67 சதவீத சமூகத்தினர் இன்றும் காலனித்துவ பிரிட்டிஷ் தோட்டக்காரர்களால் நிறுவப்பட்ட நெரிசலான 'லயன் அறைகளில்' வாழ்கின்றனர். லயன்-அறை முறையை ஒழித்து, நில உரிமைக்கான வாய்ப்புகளுடன் வலுவான வீட்டுத்திட்டத்தை உருவாக்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

அதேபோன்று, 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தோட்டத்துறை சுகாதார முறைமை இன்றும் தேசிய சுகாதார அமைப்பில் முழுமையாக இணைக்கப்படவில்லை. இலங்கையில் அனைவராலும் சமமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சுகாதார சேவை வழங்கப்படுதல் அவசியமாகும். கொள்கை அளவில், மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, இருப்பினும் அமைப்புகள் மாறும்போது இவை மாற்றத்திற்கு உள்ளாகின்றன.

சமூகம் எதிர்கொள்ளும் மற்றொரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், கொள்கை மாற்றங்களால் கிட்டத்தட்ட 8,000 பேர் தங்கள் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பணத்தை இழந்துள்ளனர். பெரும்பாலானவர்கள் 14 அல்லது 15 வயதிலேயே வேலை செய்யத் தொடங்கி, ஓய்வு பெற்ற பின்னர், இத்தகைய நிதி பணத்தை சார்ந்தே உள்ளனர்;, அதில் சிலர் வயதில் அடிப்படையில்; இறந்துவிட்டனர். ஆனால் அவர்களின் பிள்ளைகளால் அந்தப் பணத்தைப் பெற முடியவில்லை. அவர்கள் சார்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வழக்குத் தொடுக்கபட்டு, தற்போது அவர்கள் அந்த நிதிப்பணத்தை பெற தொடங்கியுள்ளனர்.

மேலும் சிறுபான்மையினரின் மொழி உரிமைகளும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. உதாரணமாக, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மக்கள் பெரும்பாலும் தமிழ் பேசும் அதே வேளையில், குறிப்பாக மருத்துவ அதிகாரிகள் சிங்கள மொழி பேசுபவர்களாக உள்ளனர். இது அவர்களின் உடல்நலப் பிரச்சினைகளைத் துல்லியமாகத் தெரிவிப்பிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. மருந்து பொதிகளில் கூட தமிழில் தகவல்கள் இல்லை மற்றும் பொதுப் போக்குவரத்திலும் தமிழ் அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை.

உதாரணமாக கொழும்பில் முறைசாரா துறையில் பணிபுரியும் ஒரு பெண்ணின் அவலநிலையை எண்ணிப் பாருங்கள். பேருந்துப் பலகை தமிழில் இல்லாவிட்டால், வீட்டிற்குச் செல்வதற்கான தனது பேருந்தை அவள் எப்படி அடையாளம் கண்டுகொள்வாள்? எல்லா இடங்களிலும் மூன்று மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படை உரிமைகளை அரசு மற்றும் தனியார்துறை அங்கீகரிக்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடிகளுடன், பள்ளிகள் மூடப்பட்டதால், இளவயது திருமணம் மற்றும் இளவயது கர்ப்பங்களும் அதிகரித்துவிட்டன மற்றும் பொருளாதார நெருக்கடியால் பெற்றோர்கள் தங்கள் 16 அல்லது 17 வயது மகள்களுக்கு திருமணம் செய்து வைக்கத் தூண்டினர். குழந்தைத் தொழிலாளர்களும் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கினர்.

கஷ்டங்களைச் சமாளிப்பதற்கும், பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பெற்றோரை அரசு கண்காணித்து ஆதரிக்க வேண்டும். அரசு அல்லது தனியார் கம்பனி; வேலைகள் மூலம் தலைமுறை முன்னேற்றத்திற்கு சமமான கல்வி அணுகல் முக்கியம். தோட்டத்துறையில், சாதி அமைப்பும் ஒரு சவாலாக உள்ளது. இதன் காரணமாக, தமது உரிமை மீறல்களுக்கு குரல் கொடுக்காதவர்களாகவும்; உள்ளனர்.

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஒப்பந்தம் (இஉஈஅஙி) மற்றும் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் உட்பட பல சர்வதேச ஒப்பந்தங்களில் இலங்கை கைசாத்திட்டுள்ளது. பெருந்தோட்டத்துறையில் உள்ள மக்களின் கஷ்டங்களை போக்குவதற்கு இவை உள்ளூர் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மனித அபிவிருத்தி தாபனம் 1990 இல் தோட்ட மக்களின் அபிவிருத்தியை முன்னிட்டு; இளம் வயதினரால் நிறுவப்பட்டது. அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை மாற்றங்களை நாங்கள் வலியுறுத்துகிறோம் மற்றும் பரிந்துரைக்கிறோம்.

2003 ஆம் ஆண்டில், பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த 300,000 நாடற்ற மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கியது. இது சிவில் சமூகத்தின் ஆதரவுடன், குடியுரிமை உரிமைகள் மீதான பல தசாப்தங்களாக வாதிடுதல் மற்றும் பரப்புரையின் உச்சகட்டமாகும். இது எங்கள் பணியில் மிகப்பெரிய மைல்கல்.

அடிமட்ட அளவிலான அணிதிரட்டலிலும் நாங்கள் ஈடுபடுகிறோம், குறிப்பாக பெண்கள, இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் தேவைகள் மற்றும் சவால்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அனைத்து திட்டங்களையும் நான் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிடுகிறேன்.

கொவிட் காலக்கட்டத்தின் போது, பாரிய உணவு பற்றாக்குறை ஏற்பட்டமையால், 350 முதல் 500 சிறு தொழில் முனைவோர் தங்கள் உணவை தாங்களே உற்பத்தி செய்துக்கொள்வதற்காக ஊக்குவித்தோம். இது ஒரு விலைமதிப்பற்ற செயற்திட்டமாக அமைந்தது. ஏனென்றால் பெண்கள் வருமானம் ஈட்ட தயாராக இருக்கும்போது, அவர்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை, மேலும் அவர்கள் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க கூடியவர்களாக மேம்படுத்தப்பட்டனர்.

பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கையில் பெண்கள் உரிமைகள் ஆணைகுழு மற்றும் சிறுபான்மை உரிமைகள் ஆணைகுழு ஒன்று நிறுவப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை நேரடியாக புகார் செய்து, நீதியை பெற்றுக்கொள்ள முடியும். இதைச் செய்ய நான் பரப்புரை செய்து வருகிறேன். எனது வாழ்நாளில், எனது மக்களுக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும், எனவே அவர்களின் உரிமைகளுக்காக நான் தொடர்ந்து போராடுவேன்.

---



## "மழை தரும் பாடம்"

(10.12.2023)

மக்களே கேளுங்கள்!
மழையின் கதைதனை
வானிலிருந்து மண்ணுக்கு
வரமாக வந்தேன்
உலகினை உய்விக்க
உயிராய் ஆனேன்
இயற்கை செழிக்க
இல்லங்கள் மகிழ
தண்ணீர் துளியாய்
தரைக்கு வந்தேன்

துன்பத்தில் மக்களை
துடிக்கவைக்கும் எண்ணம்
துளியேதும் என்னிட
மில்லை
எனது சோகம்
எண்ணில் அடங்காது

முன்பெல்லாம் எனக்கு
ஆடி அசைந்து
ஓடிவிளையாடிச் செல்ல
வழிகள் இருந்தது
ஏரிகளைவிட்டு வெளியே
எப்போதும்நான் சென்ற
தில்லை

ஆனால் இன்று
என்பாதையை மறித்தீர்கள்
கட்டிடங்கள் வீதிகள்
கனதியாய் அமைத்தீர்கள்
ஆற்றில் மண் நிரப்பி
அடுக்குமாடி கட்டினீர்கள்.
நான்போகும் பாதையை
அரணிட்டு அடைத்தீர்கள்
என்பாதை காணாமல்
ஏதுமே புரியாமல்
வீதியிலும் வீடுகளிலும்
புகுந்து தஞ்சமடைந்தேன்

எனதருமை மக்களே
நான் செல்லும்
பாதையை மறித்து
செல்லவிடாமல் தடுத்தது
யார் குற்றம் என்னைக்
குறை சொல்லாதீர்கள்
இனியாவது இப்படிச்செய்
வதை
இன்றோடு நிறுத்திடுங்கள்.

**மலர்தேவி குருபரன்**
**இலங்கை**

---

# பாலஸ்தீனம்



பாலஸ்தீனம் ஒரு நாடு
மட்டுமல்ல
அது ஓர் அடையாளம்
அது ஓர் ஆதர்சம்
அது ஒரு படிப்பினை

அதன் வாழ்க்கை
மீட்கப்பட வேண்டியது
சாதி மதம் பால் இனம்
எனப் பிரிவினைகள் கடந்து
ஏற்றத்தாழ்வுகள் நீங்கி
மீட்கப்பட வேண்டியது
மீளுருவாக்கப்பட வேண்டியது

இடிபாடுகள் இடையிலும் இடிபாடுகள் மீதும்
வாயிலும் வயிற்றிலும் அடித்துப் புலம்பும் பெண்கள்
கொல்லப்பட்டவர்களின் உடலங்களுடன்
குமுறிச் செல்லும் ஆண்கள்

இறந்தும் காயப்பட்டும்
குண்டு வீச்சின் புழுதி படிந்த உடலுடனும்
முகங்களுடனும்
அச்சத்தில் உறைந்து போயும்
அதிர்ச்சியில் உடல் பதறியபடியும் சிறுவர்

உலகச் செய்திகளில்
அச்சிலும் மின் ஊடகங்களிலும்
எனது சிறுபராயம் முதலான பதிவுகள்
முடிவுக்கு வரவேண்டிய துயரங்கள்
தொடரப்படவே கூடாத அவலங்கள்
எனது வாழ்வின் நாற்பது வருடங்கள்
அழிவிலும் அனர்த்தத்திலும்
இடப்பெயர்விலும் அகதி வாழ்விலும்
அச்சத்திலும் கூனிக் குறுகிப் போதலிலும்
இன்னும் மீள முடியாத மன அழுத்தங்களிலும்
உடலிலும் உள்ளத்திலும் மீள முடியா
சொல்லி விளங்காத
துன்பத்திலும் துயரத்திலும்

இனியும் வேண்டாம் எவருக்கும் வேண்டாம்
இங்கும் வேண்டாம் எங்கும் வேண்டாம்

பலஸ்தீனம் ஒரு நாடு
மட்டுமல்ல
அது ஒரு அடையாளம்
அது ஒரு ஆதர்சம்
அது ஒரு படிப்பினை

அதன் வாழ்க்கை மீட்கப்பட வேண்டியது
உலக வரைபடத்தின்
அறிந்தும் அறியாததுமான நாடுகளில் இருந்து
புவியியற் பரப்புகளில் இருந்து
ஒவ்வொரு பாலஸ்தீனமும் மீட்கப்பட வேண்டியது

பாதுகாப்பிற்காகக் கொல்லுபவர்கள்
சித்திரவதை செய்பவர்கள் அச்சுறுத்துபவர்கள்
அச்சமூட்டுபவர்களின்
அதிகாரம்
மனிதத்திற்கு ஆபத்தானது
மனிதர்களுக்கு அழிவையே தருவது

பாலஸ்தீனம் ஒரு நாடு
மட்டுமல்ல
அது ஒரு அடையாளம்
அது ஒரு ஆதர்சம்
அது ஒரு படிப்பினை

**சி.ஜெயசங்கர்**

# என்றும் மரணிக்காத காசாவின் குரல்- ரிவாட் அலாரீர்:
# காசா பல்கலை பேராசிரியர் இஸ்ரேலால் படுகொலை !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட கவிஞர், பேராசிரியர் Dr.ரிவாட் அலாரீரை (Dr. Refaat Alareer) உலகம் வாழ் கவிஞர்களும், பாலஸ்தீனியர்களும் இரங்கல் தெரிவிக்கின்றனர். புகழ்பெற்ற கவிஞர், கல்வியாளர் காசாவின் குரலாக என்றும் மரணிக்காத குரலாக விளங்கியவர்.

**என்றும் மரணிக்காத காசாவின் குரல் :**

பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் (Refaat Alareer) கடந்த புதன் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து அவரது குடும்பத்தவர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பேராசிரியர் ரிவாட் அலாரீர் இஸ்ரேலின்




பலத்த குண்டுத்தாக்குதல்களுக்கு மத்தியிலும் காசாவை விட்டு நீங்காமல் அங்கேயே தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1979 இல் காசா நகரத்தில் உள்ள ஷுஜாயில், புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் பிறந்தார். காசாவில் வளர்ந்த அவர், நான் எடுக்கும் ஒவ்வொரு அசைவும் மற்றும் நான் எடுத்த ஒவ்வொரு முடிவும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் பொதுவாக எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறியுள்ளார்.

ரிவாட் அலாரீர் 2001 இல் காசா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் ஆஅ பட்டமும், 2007 இல் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் MA பட்டமும் பெற்றார். அவர் புத்ரா மலேசியா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

**காசா பல்கலைக்கழக பேராசிரியர்:**

2015இல் காசா அன் சைலன்ஸ், பின்னர் காசா ரைட்ஸ் பேக் 2014 இல் பாலஸ்தீனிய சிறுகதைகளின் இரண்டு தொகுதிகளைத் தொகுத்துள்ளார். ஒரு நேர்காணலில் அவர் கூறுகையில் காசா ரைட்ஸ் பேக் நூல் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சாட்சியத்தை வழங்குவதற்கான முயற்சியாகும் என தெரிவித்துள்ளார்.

2007இல், காசாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் ரிவாட் அலாரீர் பேராசிரியரானார். அங்கு அவர் உலக இலக்கியம் மற்றும் படைப்பாற்றல் இலக்கியத்தை கற்பித்தார். வி ஆர் நாட் நம்பர்ஸ் ( WE are not numbers ) என்ற அமைப்பை அவர் இணைந்து நிறுவி, காசாவில் உள்ள எழுத்தாளர்



களை வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இணைக்கும் வழிகாட்டல் திட்டமாகும்.

2023 இஸ்ரேல்-ஹமாஸ் போரின் போது, பிபிசி, டெமாக்ரசி நவ், மற்றும் ஏபிசி நியூஸ் ஆகிய ஊடகங்களில் பணியாற்றினார். 2023 இல் ஹமாஸ்க்கு எதிரான இஸ்ரேல் தாக்குதலுக்குப் பிறகு, அவர் இந்தத் தாக்குதலை சரியாக வார்சா கெட்டோ எழுச்சியைப் போன்றது என்று கூறியமை பலத்த சர்ச்சயை உருவாக்கியது.

2021 இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடியின் போது அதில் அவரும் அவரது மனைவியும் 30க்கும் மேற்பட்ட உறவினர்களை இழந்துவிட்டதாக விவரித்தார்.

நான் இறக்க வேண்டும் என்றால் நம்பிக்கை தரட்டும் அது ஒரு கதையாக இருக்கட்டும்..


**பல வார கொலை மிரட்டலுக்கு பின் கொலை:**

யூரோ-மெட் மானிட்டர்(Euro&Mediterranean Human Rights Monitor (Euro&Med Monitor) அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டது. ரிவாட் அலாரீர் வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டதாகத் தெரிகிறது, தனது குடும்பத்தினருடன் இருந்த அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ள முழு கட்டிடத்திலும் வெடிகுண்டு வீசப்பட்டது. உறுதிப்படுத்தப்பட்ட நேரில் கண்ட சாட்சிகள்



மற்றும் குடும்பக் கணக்குகளின்படி, இஸ்ரேலிய தரப்புகளில் இருந்து அவருக்கு ஆன்லைனிலும் ஃபோன் மூலமாகவும் பல வாரகால கொலை மிரட்டல்களுக்கு உள்ளானார்.

கொல்லப்படுவதற்கு முன் தனது கடைசி நேர்காணலில், இஸ்ரேலிய குண்டுகள் பின்னணியில் வெடிக்கும் சத்தத்துடன், தன்னிடம் ஆயுதம் ஏதும் இல்லாத நிலையில், ஐஈஊ தனது வீட்டிற்கு வந்தால் தன்னைத் தற்காத்துக் கொள்வேன் என்




றும், தான் உதவியற்றவனாக உணர்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய வீரர்கள் காசாவின் சிறந்த கல்வியாளர்களில் ஒருவரை, சிறந்த மனிதனும், விலைமதிப்பற்ற காசாவின் குரலைக் குறிவைத்து, பின்தொடர்ந்து சென்று கொன்றனர் என கவிஞர் மொசாப் அபு தோஹா எழுதியுள்ளார். எனது இதயம் உடைந்து விட்டது, எனது நண்பரும் சக ஊழியருமான அலரீர் அவரது குடும்பத்தினருடன் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனிய-அமெரிக்க பேராசிரியர் சாமி அல்-அரியன் கூறுகையில் அவர் ஒரு அற்புதமான கவிஞர், காசான்களுக்கு ஒரு தெளிவான குரல், பாலஸ்தீனத்திற்கு வெளியே உள்ள மக்களுக்கு ஒரு உண்மையான பாலம். பாலஸ்தீனத்திற்குள்ளும் உலகெங்கிலும் உள்ள பலரால் அவரது இழப்பை ஜீரணிக்க முடியாது என குறிப்பிட்டார்.

2014இல் காசா ரைட்ஸ் பேக் நூல் இத்தாலிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**வார்சா கெட்டோ எழுச்சி:**

வடக்கு காசாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடங்கியதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற மறுத்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவர் சமூக ஊடகங்களில் வீடியோவை வெளியிட்டார். கட்டிடம் குலுங்குகிறது. குப்பைகள் மற்றும் துண்டுகள் சுவர்களில் மோதி தெருக்களில் பறக்கின்றன என்று அவர் எழுதினார். அத்துடன் இஸ்ரேல் மீதான ஹமாஸின் அக்டோபர் 7 தாக்குதலுக்குப் பிறகு பிபிசிக்கு அளித்த பேட்டியில், அதை ''சட்டபூர்வமான மற்றும் தார்மீக'' என்று கூறி பரவலான சர்ச்சையை ஏற்படுத்தினார். இது சரியாக வார்சா கெட்டோ எழுச்சியைப் போன்றது என்றும் அவர் கூறினார்.

வார்சா கெட்டோ எழுச்சி என்பது 1943 இல் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்தில் நடந்த ஒரு கிளர்ச்சியாகும். மேலும் யூத மக்களை அழிப்பு முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கான நாஜி முயற்சிகளை எதிர்க்க யூதர்கள் கெட்டோவிற்குள் கடத்தப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்து போராடினர்.

2015 இல் நிறுவப்பட்ட பாலஸ்தீனிய இலாப நோக்கற்ற அமைப்பான 'வி ஆர் நாட் நம்பர்ஸ்' இன் நிறுவனர்களில் ஒருவர் ஆவார். இது உலகெங்கிலும் உள்ள எழுத்தாளர்களுடன் காசாவில் உள்ள இளைஞர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

தற்போது சமூக ஊடகங்களில் அஞ்சலி செலுத்தும் முன்னாள் மாணவர் ஜெஹாத் அபுசலீம், அலரீரை 'வகுப்பறைக்கு அப்பால் தனது மாணவர்களைப் பற்றி உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்த ஒரு வழிகாட்டி மற்றும் நண்பர் என்று விவரித்தார்.

**காசா பல்கலைக்கழகத்தை இஸ்ரேல் அழித்தது:**

பாலஸ்தீனிய - அமெரிக்க எழுத்தாளரும் ஆர்வலருமான சூசன் அபுல்ஹாவா சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட வீடியோவில், 'நான் சந்தித்த கனிவான, மிகவும் தாராளமான, அர்ப்பணிப்புள்ள, அற்புதமான மனிதர்களில் ஒருவர்' என்று அவர் விவரித்தார்.

நவம்பர் 1 ஆம் தேதி ட்விட்டரில் பதிவிடப்பட்ட ஒரு கவிதையில், அலரீர் எழுதினார்: 'நான் இறக்க வேண்டும் என்றால், அது நம்பிக்கையைத் தரட்டும், அது ஒரு கதையாக இருக்கட்டும்'. இந்த பதிவு பல்லாயிரக்கணக்கான முறை பகிரப்பட்டது.

அக்டோபர் 11 அன்று அலரீர் கற்பித்த பல்கலைக்கழகத்தை இஸ்ரேல் அழித்தது. இது காசாவில் உள்ள ஒரு முக்கியமான ஹமாஸ் செயல்பாட்டு, அரசியல் மற்றும் இராணுவ மையம் என்று கூறியது.

புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் (Refaat Alareer) கடந்த புதன் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டமைக்கு உலகம் வாழ் கவிஞர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

